ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் கோவையின் பெருமை ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

SREE Annapoorna SREE Gowrishankar the pride of coimbatore Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 39 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | ஞாயிறு, டிச 24 - 30, 2023, 8 பக்கங்கள், ₹ 5/- | ஆண்டு சந்தா - ₹ 260/-

# உலகின் தலைசிறந்த தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு

## - இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் ராமகிருஷ்ண ராமா பேச்சு

✍ தி கோவை மெயில்

உலகின் தலைசிறந்த தொழில் நுட்பமாக செயற்கை நுண்ணறிவு *(Artificial Intelligence)* இருக்கிறது என்று இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் 18வது பட்டமளிப்பு விழாவில் கௌரவ விருந்தினரான ராமகிருஷ்ண ராமா கூறினார்.

கல்லூரி முதல்வர் ஜெயா ஆண்டறிக்கை வாசித்து பேசுகையில், அடுத்த 10 ஆண்டுகளுக்கு தன்னாட்சி நீட்டிப்பு, தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலில் A++ அங்கீகாரம் (3.69/4.0), என்.பி.ஏ, என்.ஐ.ஆர்.எஃப் இன்னோவேஷன் பேண்ட் என இக்கல்லூரி பல சாதனை மைல்கற்களை எட்டியுள்ளது என்றார். படிப்பில் சிறந்து விளங்கி முதலிடம் பெற்ற 25 பட்டதாரிகளுக்கு கேடயம் மற்றும் இரண்டு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.



பட்டம் பெற்ற மாணவர்களுடன் (இடமிருந்து) கல்லூரி முதல்வர் ஜெயா, இணைச் செயலர் பிரியா சதீஷ் பிரபு, நிர்வாக அறங்காவலர் சரசுவதி கண்ணையன், கௌரவ விருந்தினர் ராமகிருஷ்ண ராமா, சிறப்பு விருந்தினர் ராஜீவ்குமார், தலைமை நிர்வாக அதிகாரி கருணாகரன் ஆகியோர்.

கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் சரசுவதி கண்ணையன் பேசுகையில், “விழாவின் சிறப்பு விருந்தினர் ராஜீவ்குமார், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழுவில் உறுப்பினர் செயலாளர் எனும் உயர்ந்த பதவியில் உள்ளார்.

அவருடைய சிறப்பான நிர்வாகத் திறமையால் பல அரிய விருதுகளைப் பெற்றுள்ளார். இந்தியாவில் தொழில்நுட்ப உயர் கல்வி மிகவும் தரமான நிலையில் உள்ளதற்கு உகந்த சாட்சியாக உள்ளார்.

நமது கௌரவ விருந்தினர் ராமகிருஷ்ண ராமா, மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் முதன்மை இயக்குநர் எனும் பதவியில் திறம்பட பணியாற்றுகிறார். இவர் கணினி துறையில் 30 வருடங்கள் அனுபவம் வாய்ந்தவர். அதுமட்டுமின்றி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு எனும் துறையின்கீழ் கணினி சம்பந்தமாக அனைத்துப் பிரிவுகளிலும் முதிர்ச்சி பெற்றவர்.

இவர் பல வெளிநாடுகளில் தலைமை பொறுப்பு ஏற்று பணியாற்றி அந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளார்.

பட்டம் பெறும் இந்நாளில் உங்களைப் பெருமைப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றிய பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு இது மிகவும் சிறந்த தருணமாகும்.

இந்த விழா உங்கள் வாழ்வில் ஒரு கட்டத்தின் முடிவாகவும், மற்றொரு கட்டத்தின் தொடக்கமாகவும் அமைகிறது” என்றார்.



**சரசுவதி கண்ணையன்**
*நிர்வாக அறங்காவலர்*

> **10 ஆண்டுகளுக்கு தன்னாட்சி நீட்டிப்பு, தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலில் A++, (3.69/4.0), என்.பி.ஏ, என்.ஐ.ஆர். எஃப் இன்னோவேஷன் பேண்ட் என அங்கீகாரம் பெற்ற இக்கல்லூரிபல சாதனைமைல்கற்களை எட்டியுள்ளது.** ”



**ராஜீவ்குமார்,** உறுப்பினர் செயலாளர்,
அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கவுன்சில்

சிறப்பு விருந்தினர் புதுதில்லி அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலின் உறுப்பினர் செயலாளர் ராஜீவ்குமார் பேசுகையில், ‘பட்டதாரி மாணவர்களுக்கு துறை ரீதியாக சிந்திக்கவும், பிரச்னைகளைத் தீர்க்கவும், இந்த உலகத்திற்கு ஏற்றவாறு நம்மை மாற்றியமைக்கும் திறனையும் கல்வியின் மூலம் ஏற்படுத்த முடியும் என்றார்.

தேசிய கல்விக் கொள்கை 2020, அடுத்த தலைமுறை மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அவர்களின் அறிவை மேம்படுத்தவும், ஆராய்ச்சி அம்சங்களை வெளியிடவும், காப்புரிமை தாக்கல் செய்யவும் பயன்படுகிறது. இது எதிர்கால சந்ததியினருக்கு சர்வதேச அளவில் நமது கல்வி முறையை கொண்டு செல்ல வழிவகுக்கிறது’ என்றார்.



**ராமகிருஷ்ண ராமா**
முதன்மை இயக்குநர், மைக்ரோசாப்ட் நிறுவனம்

கௌரவ விருந்தினர் பெங்களூரு மைக்ரோசாப்ட் நிறுவன முதன்மை இயக்குநர் ராமகிருஷ்ண ராமா பேசுகையில், ‘செயற்கை நுண்ணறிவானது உலகின் சிறந்த தொழில்நுட்பமாக மாறி தற்போது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. இந்த செயற்கை நுண்ணறிவானது பல்வேறு தொழில்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்துஸ்தான் கல்லூரி மாணவர்கள் அனைத்து துறைகளிலும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி உயர்ந்த பதவிகள் பெற்று நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சிறப்பாக பணிபுரிய வாழ்த்துகள்’ என்றார்.

இணைச் செயலர் பிரியா சதீஷ் பிரபு, தலைமை நிர்வாக அதிகாரி கருணாகரன், பேராசிரியர்கள் உள்ளிட்டோர், வாழ்க்கையில் சிறப்பிடம் பெற அனைத்து பட்ட தாரிகளையும் வாழ்த்தினர். 2021ஆம் ஆண்டு தேர்ச்சிபெற்றசுமார் 1,400 க்கும்மேற்பட்ட பட்டதாரிகள் பட்டப்படிப்புசான்றிதழையும் விருதுகளையும்பெற்றனர்.

# இந்துஸ்தான் சர்வதேச பள்ளியில் விளையாட்டு விழா

இந்துஸ்தான் சர்வதேச பள்ளியில் 8 ஆவது ஆண்டு விளையாட்டு விழா, இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கோயம்புத்தூர் தெற்கு மண்டல துணை ஆணையர் சண்முகம், கொடியேற்றி விழாவைத் தொடங்கி வைத்தார். இதனையடுத்து, மாணவமாணவிகளின் கண்கவர் அணிவகுப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து, 200 மீட்டர், 100 மீட்டர், 75 மீட்டர், 50 மீட்டர், ரிலே போன்ற தடகள போட்டிகள் நடைபெற்றன. இந்த போட்டிகளில் மாணவர்கள் தங்கள் திறமைகளைத் திறம்பட வெளிப்படுத்தினர்.

விழாவில், கோயம்புத்தூர் தெற்கு மண்டல துணை ஆணையர் சண்முகம் பேசுகையில், ‘பள்ளி நாட்களில் மாணவர்கள் விளையாட்டில் தங்கள் திறமைகளை வெளிக்கொணர வேண்டும். வெற்றி,தோல்வி இரண்டையும் ஒருசேர விளையாட்டில் மட்டுமே கையாள முடியும்‘ என்று பேசி மாணவர்களை ஊக்குவித்தார். இவரைத் தொடர்ந்து, இந்துஸ்தான் குழும நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் விளையாட்டு விழாவில் பங்கேற்ற மாணவ மாணவியர்களைப் பாராட்டிப் பேசியதோடு, வெற்றிபெற்ற அணிகளுக்குக் கோப்பைகள் வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சியில், பள்ளி முதல்வர் சுஜா.டி.நாயர், ஆசிரியர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.



விளையாட்டு விழாவில் வெற்றிபெற்ற அணிக்கு விருது வழங்கிய இந்துஸ்தான் குழும நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், உடன், இணைச் செயலர் பிரியா சதீஷ் பிரபு.

# திராவிட மாடல் ஆட்சி பெண்களின் நிலையை உயர்த்தியது

## -தமிழ்நாடு சட்டமன்றப்பேரவைத் தலைவர் அப்பாவு

✍ தி கோவை மெயில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் சட்டமன்ற நாயகர் கலைஞர் எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அப்பாவு தலைமை வகித்து பேசுகையில்,

ஐஐடி, ஐஐஎம் போன்ற மத்திய பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களில் 80 முதல் 90 சதவீதம் பேர் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களே பேராசிரியர்களாக உள்ளனர். இதனால் தான் நம் மாணவர்கள் அங்கு படிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. காமராஜர், எம்.ஜி.ஆர்., மற்றும் கலைஞர் போன்ற முக்கிய தலைவர்கள் பெரும் போராட்டம் நடத்தியதால் தான் தற்போது 69 சதவீதம் இடஒதுக்கீடு கிடைத்துள்ளது. மேலும், தமிழகத்தில் 72 சதவீதம் பெண்கள் படித்து வருகின்றனர். இதற்கெல்லாம் தி.மு. க ஆட்சியின் பல்வேறு திட்டங்களே முதன்மை காரணமாக அமைகிறது.

தற்போது ஒன்றிய அரசு, புதிய கல்வி கொள்கை என்ற பெயரில் குலக்கல்வி முறை ஒன்றை கொண்டு வருகிறது.





‘சட்டமன்ற நாயகர் கலைஞர்’ விழாக்குழு கருத்தரங்கில் பங்கேற்ற தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அப்பாவு, இந்துஸ்தான் குழும நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் உள்ளிட்ட பலர்.

உயர் வகுப்பினருக்கு ஆட்சி அதிகாரம் கொடுக்கத் தான் இந்த புதிய கல்வி முறை கொண்டு வரு கின்றனர். மருத்துவ கல்லூரியில் புதிய கல்வி கொள்கையின் அடிப்படையில் 10 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு மருத்துவ இடம் என்ற விதத்தில் சட்டம் கொண்டு வரவிருக்கின்றனர்.

இந்நிலையில், புதிய கல்வி முறை அமல்படுத்தப்பட்டால் நமக்கான மருத்துவ இடம் குறைந்து பிற மாநிலத்தை சேர்ந்தவர்கள் இங்கு படிக்க வருவர். அதற்கு ஒரு போதும் இடமளிக்க கூடாது. எல்லோருக்கும் கல்வி என்பது தான் திராவிட மாடல் ஆட்சி என்றார்.

தொடர்ந்து, கலைஞரின் சாதனைகளைக் குறித்து வெவ்வேறு தலைப்புகளில் உரையாற்றிய சிறந்த 5 கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவு பரிசாக ஊக்கத்தொகையும் சான்றிதழ்களும் வழங்கினார்.

இந்துஸ்தான் கல்லூரி செயலாளர் சரஸ்வதி கண்ணையன், மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா கார்த்திக் உள்ளிட்டோர் தலைமை வகித்தனர்.

முன்னதாக தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா கார்த்திக் வரவேற்புரை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ஷர்மிளா வாழ்த்துரை வழங்கினார்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற பேரவை அலுவலர்கள், மாவட்ட வருவாய்த் துறை ஆட்சியர், கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# கோவை மக்களின் இரவு சூரியன்

# காவல் ஆணையர் பாலகிருஷ்ணன்

✍ ப.சுகன்யா, தி கோவை மெயில்

ஒரு தனி நபரின் வாழ்க்கையை வடிவமைப்பதில் சமூகத்தின் பங்கு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறதோ, அதேபோல் சிறந்த கட்டமைப்பு கொண்ட சமூகத்தை வடிவமைப்பதில் காவல் துறையினரின் பங்கும் முக்கியமாக உள்ளது. மக்கள் பாதுகாப்பு உணர்வுடன் தங்கள் இருப்பிடங்களில் நிம்மதியாக உறங்குகிறார்கள் என்றால், அதற்காக காவல்துறையினர் தங்கள் உறக்கத்தைத் துறக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதிலும், பெருநகரங்களில் பணியாற்றும் காவல்துறை அதிகாரிகள் பங்களிப்பு நகர மக்களின் பாதுகாப்பிற்கும் நிம்மதிக்கும் முக்கியமான ஒன்றாய் இருக்கிறது.

நம்மிடம் இருந்து விடைபெறும் இந்த 2023 ஆங்கில ஆண்டில், தமிழ்நாட்டின் முக்கிய தொழில் நகரமான கோவை மாநகரில் பொதுமக்களின் நலன்களுக்காகத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு சட்டம் ஒழுங்கு பாதுகாப்பைச் சிறப்பாகவும் செம்மையாகவும் செயல்படுத்திவரும் கோவை மாநகரக் காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் அவர்களிடம் பிரத்யேக நேர்காணல் செய்திருந்தோம். அதன் விவரங்கள் உங்கள் பார்வைக்கு.,

### காவல்துறையில் டெக்னாலஜி அதிகரித்து இருக்கிறதே?


தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இரண்டாவது மிகப்பெரிய நகரம் கோயம்புத்தூர். இங்கு, தொழில்நுட்பங்கள் வேகமாக வளர்ந்து வருகிறது. தொழில்நுட்பத்தில் புரட்சியை ஏற்படுத்திவரும் செயற்கை நுண்ணறிவை அனைத்து துறையினரும் தங்கள் பிரிவுகளில் உட்புகுத்தி வருகின்றனர். மாநகர காவல் துறையிலும் தொழில்நுட்ப புத்தாக்கம் செய்து வருகிறோம். காலத்திற்கு ஏற்றவாறு நம்மை மாற்றிக்கொள்வது கட்டாயம். சமூக ஊடகங்கள் மற்றும் செல்போன் அப்ளிகேஷன்களை பயன்படுத்தித் தப்பிக்கும் குற்றவாளிகள் மற்றும் சந்தேகத்துக்குரிய நபர்களைக் கண்காணிக்க 'ஆக்டோபஸ்' என்ற பிரத்யேக மென்பொருள் உருவாக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

### மாநகர கண்காணிப்பில் எதிர்கொள்ளும் சவால்கள்?

கல்விக்கான மையமாகவும், மெடிக்கல் டூரிசம், சுற்றுலாத்தல மையமாகவும் கோயமுத்தூர் இருப்பதால் வெளிமாநிலத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கான மாணவர்கள், பணியாளர்கள், வெளிநாட்டவர்கள் எனப் பலர் இங்கு தங்கியுள்ளனர். பல்வேறு மாநில, மாவட்டங்களில் இருந்து வந்து செல்லும் மக்கள் கூட்டமும் அதிகம். பல்வேறு பகுதிகளில் திருடு போகும் செல்போன்களை கண்டுபிடிக்க தனிப்படை அமைத்து அவற்றை அதன் உரிமையாளர்களிடம் வழங்கி வருகிறோம். அதே சமயத்தில் வகுப்புவாத ஒற்றுமை போன்று சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பது சற்று சவால்கள் நிறைந்ததாகத்தான் இருக்கிறது.

### போதைப் பொருள் பயன்பாடு பெருகி இருப்பதாகக் கேள்விப்பட நேர்கிறதே?

இளைய தலைமுறையினர் போதைப் பொருளுக்கு அடிமையாவதைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் தமிழக அரசின் வழிகாட்டுதலின்கீழ் எடுத்து வருகிறோம். குறிப்பாக, போதைப் பொருள் இல்லா கல்லூரி வளாகம், போதைப் பொருள் இல்லா கோவை போன்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். இதுகுறித்தான விழிப்புணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்த, பகுதிவாரியாகப் பிரித்து




சுழற்சி முறையில் காவலர்கள் அவரவர் எல்லைக்கு உட்பட்ட பள்ளி, கல்லூரிக்கு நேரில் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களைக் கடத்துதல், விற்பனை செய்தல் ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### ஒரு எழுத்தாளராக உங்களை அடையாளப்படுத்திக்கொள்ளத் தூண்டியது எது?

சிறு வயது முதலே கவிதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம். சிறு கதைகளை அவ்வப்போது எழுதியதும் உண்டு. புத்தகம் படிக்கும் பழக்கம் இன்றுவரை தொடர்வதால், நமது கருத்துக்களை எழுத்து வடிவமாக பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே தோன்றும். அந்த நிலையில், கருத்துக்களை சுருக்கமாகவும், வலிமையாகவும் தெரிவிக்க எழுத்து ஊடகத்தைத் தேர்ந்தெடுத்தேன். சொல்லப்போனால், 2 புத்தகம்தான் எழுதியிருக்கிறேன். பொதுவாக, போலீஸ் என்றவுடன் காக்கிச்சட்டை, கோபம், அழுத்தம் கொண்ட மனிதர்கள் என்று பரவலான கருத்து உண்டு. அப்படி இல்லை என்றுதான் 'எனக்கு இன்னொரு முகம் இருக்கு' என்ற புத்தகத்தை வெளியிட்டேன்.

### நண்பர்கள் வட்டாரம் எப்படி?

மக்கள் பணியில் இருப்பதால், விடுமுறை நாட்கள், வேலை நாட்கள் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. அதனால், பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களே என் நட்பு வட்டத்தில் அதிகம்.

### கோவை மக்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

மக்களுக்கான துறையாக காவல்துறை இருப்பதால், அவர்களின் பிரச்னைகளை வெளிக்கொண்டு வர, ஒவ்வொரு பகுதிகளுக்கும் காவலர்களை நியமித்து இருக்கிறோம். ஆகவே, *neighbourhood policing* பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொண்டவர், 2024 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறோம். கோயம்புத்தூரில் சாலை ஓரங்களில் படுத்து உறங்கும் சாமானியர்கள் முதல் மாட மாளிகை சாதனையாளர்கள் என அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

## ஆதார் அட்டையில் இலவசமாக முகவரி மாற்றம்

AADHAAR

ஆதார் கார்டில் உள்ள உங்களின் முகவரியை ஆன்லைன், ஆஃப்லைன் என இரண்டு விதத்திலும் புதுப்பித்துக்கொள்ள முடியும். அதிலும், ஆன்லைன் மூலம் வரும் டிசம்பர் 31ஆம் தேதி வரை இலவசமாக முகவரியை மாற்றிக்கொள்ளலாம். அதன் பிறகு, கட்டணம் செலுத்தி மாற்றிக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் ஆன்லைன் மூலம் ஆதாரில் முகவரியை எப்படி மாற்றுவது என்று பார்ப்போம்.

உங்கள் ஆதார் எண் பயன்படுத்தி UIDAI அதிகாரப்பூர்வ இணையதளத்திற்கு (https://myaadhaar.uidai.gov.in/) சென்று உள்நுழையவும். பிறகு 'எனது ஆதார்' என்பதை கிளிக் செய்து 'ஆதாரைப் புதுப்பிக்கவும்' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

அதன் பிறகு, முகவரி புதுப்பிப்பை கிளிக் செய்து, உங்கள் முகவரி உள்ளிட்ட தகவல் படிவத்தை நிரப்பவும்.

உங்கள் பாஸ்போர்ட், வாக்காளர் ஐடி, ஓட்டுநர் உரிமம், வங்கி அறிக்கை போன்ற சரியான முகவரி ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றவும். பின்னர், அனைத்து விவரங்களையும் கவனமாக மதிப்பாய்வு செய்து 'சமர்ப்பி' என்பதை கிளிக் செய்யவும்.

இதன் பிறகு, உங்கள் செல் எண்ணிற்குக் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் புதுப்பிப்பு கோரிக்கை எண்ணை (URN) பெறுவீர்கள்.


மேலே குறிப்பிட்ட செயல்முறைகளைப் பயன்படுத்தி ஆதார் அட்டையைப் புதுப்பித்து வைத்திருப்பது மிகவும் முக்கியமானது.

# இதயத்துடிப்பில் மாற்றமா?

## அலட்சியம் வேண்டாம்

# 'ஆபத்து'






## - டாக்டர் லாரன்ஸ் ஜேசுராஜ், கே.எம்.சி.ஹெச். மருத்துவமனை

✍ ப.சுகன்யா, தி கோவை மெயில்

இன்றைய நவீன வாழ்வியல் சூழ்நிலை மாற்றத்தின் விளைவாக உடல்நலனைச் சீர்குலைக்கும் நோய்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, இதயம் சம்பந்தப்பட்ட வியாதிகளால் அதிகளவில் இந்தியர்கள் பாதிக்கப்படுவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அந்த வகையில், இதய நோய் என்றவுடன் நம்மில் பலருக்கும் மாரடைப்பு, இதய செயலிழப்பு ஆகிய நோய்கள் மட்டுமே நினைவுக்கு வரும்.

ஆனால், அதிகப்படியான இதயத்துடிப்பும்; குறைவான இதயத்துடிப்பும் ஒருவகை இதயம் தொடர்பான நோய்தான் என்கிறார் கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையின் இதயத் துடிப்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் லாரன்ஸ் ஜேசுராஜ்.

இதுகுறித்து மேலும் அவர் கூறுகையில், ''இதயத்துடிப்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் நமக்குப் பழக்கம் இல்லாத வியாதிகள் என்றே சொல்லலாம். இதயத் துடிப்பில் ஏற்படும் மாறுபாடுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். சாதாரணமான சமயங்களில் ஒருவருக்கு சராசரியாக இதயத்துடிப்பு 50ல் இருந்து 100க்குள் இருக்கும். அதுவே, 50 க்குள் கீழ் சென்றால் இதயத்துடிப்பு குறைபாடு **(bradycardia)** என்கிறோம். அதேபோல், 100க்கு மேல் இதயம் துடிப்பது **(tachycardia)** டாக்கார்டியா என்கிறோம். இவ்வாறாக, இதயத்துடிப்பு அதிகரிப்பதற்கும்; குறைவதற்கும் காரணங்கள் உள்ளன.

இதயத்துடிப்பு உருவாகும் இடங்களில் அதாவது, இதயத்தின் மேல் பகுதிகள் அல்லது இதயத்தின் நடுப்பகுதிகளில் குறைபாடுகள் இருக்கும்பட்சத்தில் இதயத்துடிப்பு குறைவு **(bradycardia)** என்கிறோம். இவ்வாறான பிரச்னைகளை எதிர்கொள்ளும் நபர்களுக்கு பேஸ்மேக்கர் எனும் செயற்கைக் கருவியை உபயோகப்படுத்தி அந்தப் பிரச்னைகளை சரி செய்வோம். இந்த சிகிச்சை முறை ஓபன் ஹார்ட் சர்ஜரி போன்றது அல்ல. இதயத்தின் வெளிப்பகுதியில் ஊசி வழியாக சிகிச்சை செய்யும் முறையாகும்.


- டாக்டர் லாரன்ஸ் ஜேசுராஜ்

### அனைவரும் சந்திக்கும் பிரச்னை


இந்த ஒழுங்கற்ற இதயத்துடிப்பு, சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சந்திக்கும் பிரச்னைகளில் ஒன்று. நமது உடலில் இதயத்துடிப்பு சற்று மாறும்போது, படபடப்பு, மயக்கம், மூச்சுத்திணறல் மற்றும் அதிக வியர்வை போன்ற உணர்வுகளுக்கு வழிவகுக்கும். இதுபோன்ற பிரச்னை வராமல் இருக்க, தினசரி வாழ்க்கை முறையில் சிறிய மாற்றங்களை செய்து, அதனை முறையாக கடைபிடித்தாலே போதும்.

> தற்போதைய சூழ்நிலைக்கேற்ப மருத்துவத் துறையில் அறிமுகமான புதுவித மேப்பிங் சிஸ்டம் முறைகள் கோவை மெடிக்கல் சென்டரில் உள்ளது. இதன் மேம்பட்ட பயன்கள் என்னவெனில், இதயத்தில் ஏற்படும் மின் சமிக்ஞைகளை அது எங்கே இருந்து வருகிறது என்று மிகவும் துல்லியமாகக் கண்டறிய உதவும்.

அதாவது, உணவில் அதிக மாவுச்சத்து நிறைந்த உணவுகளை எடுக்காமல், நார்ச்சத்து நிறைந்த உணவுகளை சேர்க்க வேண்டும். மேலும், புகைப்பிடித்தல், மது அருந்துதல் பழக்கத்தை கண்டிப்பாக விட்டுவிட வேண்டும்.

சீரற்ற இதயத்துடிப்பு ஏற்பட்டாலே, இதயத்தில் பிரச்னை இருப்பதாக அர்த்தமல்ல. உடலின் வெவ்வேறு செயல்பாடுகளின்போது, இதயத்துடிப்பு வேகமடைவது இயல்பு. இதேபோல், ஒருவர் ஓய்வெடுக்கும்போது அல்லது தூங்கும்போது, மெதுவாக இதயத்துடிப்பு ஏற்படுவது இயல்பானது. சீரற்ற இதயத்துடிப்பு பிரச்னைகளுக்கு சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்ககாவிட்டால், அவை இதயம், மூளை மற்றும் பிற உறுப்புகளுக்கு தீங்கு விளைவிக்கும். இது ஒரு அபாயகரமான பக்கவாதம், இதய செயலிழப்பு ஆகியவற்றை ஏற்படுத்தலாம்.

இதயத் துடிப்பை சரிசெய்வதற்காக கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் பிரத்யேகமாக 'இதயத் துடிப்பு சிகிச்சை மையம்' ( **Center of Excellence for Atrial Fibrillation)** செயல்பட்டு வருகிறது. இங்கே, இதயத் துடிப்பு சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளுக்கும் நவீன மருத்துவ உபகரணக் கருவிகள் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதைத்தவிர, இதயத்துடிப்பு அதிகரிப்பதை கண்டுபிடிப்பதற்குரிய மேப்பிங் சிஸ்டம் வழிமுறைகளும் இங்குள்ளன.




டூ டைமென்ஷனல் மேப்பிங் எக்ஸ்ரே பார்த்து சரிசெய்வது மற்றும் த்ரீ டைமென்ஷனல் மேப்பிங் எக்ஸ்ரே இல்லாமல் செய்யப்படும் மேம்பட்ட சிகிச்சை ஆகிய இரண்டு வகையாக சிகிச்சை உள்ளன. இதில், என்சைடூ எக்ஸ் **(EnSite X)** என்று சொல்லக்கூடிய தற்போதைய சூழ்நிலைக்கேற்ப மருத்துவத் துறையில் தற்போது அறிமுகமான புதுவித **3D** மேப்பிங் சிஸ்டம் முறைகள் கோவை மெடிக்கல் சென்டரில் தமிழகத்தில் முதன்முறையாக துவங்கப்பட்டுள்ளது.

இதயத்தில் ஏற்படும் மின் சமிக்ஞைகள் எங்கே இருந்து வருகிறது என்று மிகவும் துல்லியமாகக் கண்டறிய முடிவது, இதன் மேம்பட்ட பயன்கள் ஆகும். இதன் நன்மைகள் எனில், அதிகரிக்கும் இதயத்துடிப்பு பிரச்னையை விரைவாக சரி செய்ய முடியும். அதேவேளையில், சிகிச்சைக்கான நேரமும் குறைவு. இதுபோன்று சீரற்ற இதயத்துடிப்பு பிரச்னைகளை சரிசெய்ய 'சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ்' எனும் பிரத்யேக இதயத்துடிப்பு சிகிச்சை மையம், நமது கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் 2020 முதல் இயங்கி வருகிறது. அனைவரும் இந்த அரிய சிகிச்சை முறையைப் பயன்படுத்தி, தமது வாழ்நாளை அதிகரிக்க, நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் சிகிச்சை எடுத்துக்கொள்வோம்'' என்கிறார் மருத்துவர்.

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் கோவையின் பெருமை ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

Sree Annapoorna Sree Gowrishankar the pride of coimbatore Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 39 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | ஞாயிறு, டிச 24 - 30, 2023, 8 பக்கங்கள், ₹5/- | ஆண்டு சந்தா - ₹260/-

# ‘தீதும் நன்றும், பிறர் தர வாரா...’



✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

**கருணாநிதிக்கு பேராசிரியர் அன்பழகன்போல, ஸ்டாலினுக்கு பேராசிரியர் பொன்முடி. அரசியலைத் தாண்டி ஸ்டாலினுக்கும், பொன்முடிக்கும் குடும்ப அளவில் மிக நெருக்கம். அதேபோல, அழகிரியிடமும் நட்பு பாராட்டினார் பொன்முடி. தற்போது பொன்முடிக்கு ஏற்பட்டிருக்கும் இந்த சூழ்நிலை அரசியல் ரீதியாக மிகப்பெரிய பின்னவடைவுதான். தி.மு.கவில் பல அமைச்சர்கள்மீது சொத்துக்குவிப்பு வழக்கு இருக்கிறது. ஆனால், பொன்முடிக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்னைக்கு அவரே முதல் காரணமாகிவிட்டார்.**

சொத்துக் குவிப்பு வழக்கில் மூன்று ஆண்டு சிறைத் தண்டனை பெற்றுள்ள திமுக துணைப் பொதுச் செயலர் முனைவர் க.பொன்முடியின் அரசியல் முற்றிலும் முடிவுக்கு வந்துவிட்டதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் அமைச்சர் பொன்முடிக்கும், அவரது மனைவிக்கும் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. மேலும், ரூ.50 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவரது அமைச்சர் பதவி பறிபோயிருக்கிறது.

இளம் வயதில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மாணவராக பயிலும்போதே பொது மேடை, அரசியல் மேடை என எந்த மேடையாக இருந்தாலும் திராவிட சித்தாந்தங்களைப் பேசாமல் இருக்கவே மாட்டார். ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து பொன்முடி சர்ச்சையில்தான் திளைத்து வருகிறார். மகளிருக்கான இலவச பேருந்து சேவையை ‘ஓசி’ எனப் பேசி, பெரும் சர்ச்சையில் சிக்கினார். நிர்வாகிகளை ஒருமையில் பேசுவது, குறை சொல்ல வந்த பெண்களிடம் ஆவேசமாகப் பேசுவது எனத் தொடர் சர்ச்சையில் சிக்கி வந்தார். இந்நிலையில்தான், சொத்துக்குவிப்பு வழக்கில் சிக்கி, தனது பதவியை இழந்திருக்கிறார்.

திமுகவில் பட்டதாரிகள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்த காலகட்டத்தில் அப்போதைய ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டம், டி.எடையார் கிராமத்தில் கந்தசாமி மரகதம் தம்பதிக்கு 19.8.1950 இல் பிறந்தவர்தான் பொன்முடி (எ) தெய்வசிகாமணி. கல்வி, பொருளாதாரத்தில் மேம்பட்ட குடும்பப் பின்னணியிலிருந்து வந்த காரணத்தாலோ என்னவோ எம்.ஏ. வரலாறு, எம்.ஏ. பொது நிர்வாகம், எம்.ஏ. சமூக அறிவியல், பி.எட்., பி.ஜி.எல்., பி.ஹெச்.டி. எனப் பல்வேறு பட்டங்களுக்கு சொந்தக்காரராக மாறினார்.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயிலும்போதே மாணவர் திமுகவில் முக்கியப் பொறுப்பில் இருந்தவர் பொன்முடி. திராவிட சிந்தாந்தத்தில் ஆழங்கால் பட்டவர். விழுப்புரம் அரசுக் கல்லூரியில் 17 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றிய அவர், திராவிட இயக்கத்தின் மீதான பற்றினால், அரசுக் கல்லூரிப் பேராசிரியர் பதவியைத் துறந்து திமுகவில் இணைந்தார்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் தீவிர விசுவாசியான பொன்முடிக்கு முதன்முதலில் 1989 இல் விழுப்புரம் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைத்தது. 47.18 சதவீத வாக்குகள் பெற்று திமுகவுக்குள் கவனம் பெற்றார்.

தேர்தலில் வெற்றிபெற்றவருக்கு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பதவியைக் கொடுத்தார் கருணாநிதி. இதன்மூலம், தமிழ்நாட்டு மக்களின் கவனத்தைப் பெற்றார். 1991ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அதே விழுப்புரம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். தொடக்கத்தில் விழுப்புரம் மாவட்ட திமுகவில் கோலோச்சிய செஞ்சி ராமச்சந்திரனின் ஆதரவாளராக விளங்கிய அவர், 1996ல் மீண்டும் விழுப்புரத்தில் வெற்றிபெற்ற அவருக்கு, போக்குவரத்துத் துறை ஒதுக்கப்பட்டது.

2001 மற்றும் 2006 இல் மீண்டும் விழுப்புரத்தில் வெற்றிபெற்ற அவருக்கு, 2006 இல் கருணாநிதி அமைச்சரவையில் உயர்கல்வித் துறை, கனிம வளத்துறை அமைச்சர் பதவி ஒதுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் கட்சிக்குள்ளும் அவருக்கு உயர் பதவிகள் கிடைத்தன.

இந்தக் காலகட்டத்தில் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாக ஜெயலலிதா தலைமையிலான அரசு, பொன்முடிக்கு எதிராகச் சொத்துக்குவிப்பு வழக்கை 2011 இல் பதிவு செய்தது. அதன்படி, வருமானத்துக்கு அதிகமாக 1.75 கோடி ரூபாய் அளவுக்குச் சொத்துகள் சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத் துறை தரப்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு, விழுப்புரம் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்துவந்த நிலையில், பொன்முடி, அவருடைய மனைவி இருவரின் மீதான குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரமில்லையென்று 2016 இல் விடுவிக்கப்பட்டார்.

இதை எதிர்த்து லஞ்ச ஒழிப்புத்துறை சார்பாக உயர் நீதிமன்றத்தில் 2017 இல் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு ஐந்து ஆண்டுகளுக்குமேல் நடந்துவந்தது. அதன்படி, இந்த வழக்கில் லஞ்ச ஒழிப்புத் துறை, அரசுத் தரப்பு மற்றும் பொன்முடி தரப்பின் வாதங்கள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த நவம்பர் 27 ஆம் தேதி எழுத்துப்பூர்வமான வாதங்கள் தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டது.

இந்த நிலையில்தான், வருமானத்துக்கு அதிகமாக ரூ.1.75 கோடி சொத்துச் சேர்த்த வழக்கில் அமைச்சர் பொன்முடி, அவரது மனைவி விசாலாட்சி இருவருக்கும் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் எட்டாவது பிரிவு 8 (1) ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி அமைச்சர் பொன்முடி தனது பதவியை இழந்திருக்கிறார்.

> **“ கட்சித் தொண்டர்களை மட்டுமின்றி நிர்வாகிகளைக்கூட தனது அடிமைபோல எண்ணுவதில் இவருக்கு நிகர் இவர்தான். பொன்முடிதான் அப்படி என்றால் அவரது மனைவி அதற்கு ஒருபடி மேல். பொன்முடி மனைவி காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றவர்களுக்கு மட்டுமே கடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் சீட் கிடைத்தது.**

இதுகுறித்து விழுப்புரத்தைச் சேர்ந்த திமுக நிர்வாகிகள் சிலர் கூறுகையில், ‘அமைச்சர் பொன்முடியின் எதிர்காலம் இனி என்னவாகும் என்ற கேள்வி எழுந்துள்ளது. கருணாநிதிக்கு பேராசிரியர் அன்பழகன்போல, ஸ்டாலினுக்கு பேராசிரியர் பொன்முடி. அரசியலைத் தாண்டி ஸ்டாலினுக்கும், பொன்முடிக்கும் குடும்ப அளவில் மிக நெருக்கம். அதேபோல, அழகிரியிடமும் நட்பு பாராட்டினார் பொன்முடி.

தற்போது பொன்முடிக்கு ஏற்பட்டிருக்கும் இந்தச் சூழ்நிலை அரசியல் ரீதியாக மிகப்பெரிய பின்னவடைவுதான். தி.மு.கவில் பல அமைச்சர்கள்மீது சொத்துக்குவிப்பு வழக்கு இருக்கிறது. ஆனால், பொன்முடிக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்னைக்கு அவரே முதல் காரணமாகிவிட்டார். ஏனென்றால், தான் செய்வதுதான் சரி என்று மனநிலை கொண்டவர் பொன்முடி. மறைந்த முதல்வர் ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில் சிக்கியிருந்தபோது, அவரை ‘வாய்தா ராணி’ என்று நக்கல் செய்தார் பொன்முடி.

அவரைப் பொருத்தவரை கட்சிக்கும் தலைமைக்கும் எதிரி என்றால், தனக்கும் அவர்கள் எதிரிதான் என்று எண்ணக் கூடியவர். கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி வரை அவரின் நெருக்கம் தொடர்ந்தது. அதேநேரத்தில் தலைமை, மூத்த நிர்வாகிகளை தாண்டி யாரிடமும் நெருக்கமாகப் பேசக்கூட மாட்டார். கருணாநிதியுடனான பொன்முடியின் இந்த தாக்கமே, இவர் மீது ஜெயலலிதாவின் கோபப் பார்வை விழ காரணமானது. அதனால்தான், பிற வழக்குகளைக் காட்டிலும் பொன்முடி மீதான வழக்கில் மிகத் தீவிரமாக இருந்தார். அப்போதும்கூட தலைமையின் சொல் கேட்டு அவர் நடக்கவே இல்லை.

‘ஆடிட்’டுக்கும் முறையாக ஒத்துழைக்கவில்லை. இருப்பினும், விழுப்புரம் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. ஆனால், சி.வி.சண்முகம் சட்டத்துறை அமைச்சராக இருந்தபோதுதான், இந்த வழக்கைத் துரிதப்படுத்தினார். பொன்முடிக்கு எதிரான பல ஆதாரங்களை அவரே நேரடியாகக் களத்தில் இறங்கி சேகரித்தார். அதுதான் தற்போது பெரும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. பொன்முடி கொஞ்சம் பொறுமையாக இருந்திருந்தால் பிரச்னை இவ்வளவு தீவிரமாக ஆகியிருக்காது. தற்போது அவர் குற்றவாளி என்று தீர்ப்பு வந்ததைக்கூட விழுப்புரம் திமுகவினரே ரசிக்கத்தான் செய்கிறார்கள்.

பக்கத்து மாவட்டத் தலைகளும் குஷியில் ஆரவாரம் செய்கிறார்கள். அந்த அளவுக்குச் சொந்த மாவட்டத்திலேயே வெறுப்பைச் சம்பாதித்து வைத்திருக்கிறார் பொன்முடி. அதிமுகவில் இருந்து திமுகவுக்கு வந்து, விழுப்புரம் தொகுதியில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தை தோற்கடித்த லட்சுமணனை, பொன்முடி ஒரு மனிதனாகக்கூட மதிப்பதில்லை.

ஊரக உள்ளாட்சித் தேர்தலில் லட்சுமணன் ஆதரவாளர்கள் யாருக்கும் சீட் வழங்கவில்லை. கட்சி நிர்வாகிகள் லட்சுமணன் வீட்டுக்குச் சென்றால், அதன்பின்னர் கட்டம் கட்டப்படுவது தொடர்கதையாக இருந்தது. பொன்முடி மட்டுமன்றி அவரது மகன் கௌதம சிகாமணிகூட இதேபோலத்தான் அகங்காரம் கொண்டவர். இப்போதைய தீர்ப்பு விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்ட திமுகவினரை மிகவும் உற்சாகப்படுத்தியுள்ளது. இந்த இரு மாவட்டங்களிலும் பொன்முடியின் பிடி தளர, வாய்ப்பு உருவாகியிருப்பதால் புதியவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற உற்சாகம் பிறந்துள்ளது.

இதேபோன்ற நிலைமையில்தான் முன்னாள் அமைச்சர் செல்வகணபதியும் இருந்தார். ஆனாலும் அவருக்குக் கட்சி உறுதுணையாக இருந்தது. தற்போது தீர்ப்பு 30 நாள்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தலைமை எடுக்கும் முடிவை வைத்துத்தான் பொன்முடியின் எதிர்காலம் இருக்கிறது’ என்றனர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றிருக்கும் பொன்முடி மீது, செம்மண் வழக்கு ஒன்றும் நிலுவையில் இருக்கிறது. இதை மையப்படுத்தித்தான் அமலாக்கத்துறை அவரது வீட்டில் சமீபத்தில் சோதனை நடத்தியது. அந்த வழக்கும் சூடு பிடித்தால், பொன்முடியின் நிலைமை இன்னும் மோசமாகிவிடும் என்கிறார்கள் உடன்பிறப்புகள். கட்சித் தொண்டர்களை மட்டுமன்றி நிர்வாகிகளைக்கூட தனது அடிமைபோல எண்ணுவதில் இவருக்கு நிகர் இவர்தான். பொன்முடிதான் அப்படி என்றால் அவரது மனைவி அதற்கு ஒருபடி மேல். பொன்முடி மனைவி காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றவர்களுக்கு மட்டுமே கடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் சீட் கிடைத்தது.

விழுப்புரம் மாவட்டத்தில் ‘கிச்சன் கேபினட்’க்குத்தான் அதிக அதிகாரம். எனவே, பொன்முடியை பார்ப்பதைவிட அவரது மனைவியைப் பார்க்கக் கூட்டம் அலைமோதும். கட்சியில் இல்லாத பொன்முடி மனைவி, விழுப்புரம் மாவட்ட திமுகவை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் என்பது கசப்பான உண்மை. இந்த தீர்ப்பு மூலம் பொன்முடியும், பொன்முடி மனைவியும் குற்றவாளிகள் எனத் தண்டிக்கப்பட்டுள்ளது உள்ளூர் திமுகவினரை குஷிப்படுத்தியுள்ளது. குடும்ப ஆதிக்கத்தில் இருந்து விழுப்புரம் மாவட்ட திமுகவுக்கு விடுதலை கிடைத்துள்ளதாகவே உடன்பிறப்புகள் உணரத் தொடங்கியுள்ளனர்.

## புதிய பாதை பிறக்குது


இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது,

‘விழுப்புரம் மாவட்ட திமுகவைப் பொருத்தவரை செஞ்சி ராமச்சந்திரன் மதிமுகவுக்குச் சென்ற பின்னர் பொன்முடிதான் திமுகவின் முகமாக இருக்கிறார். வன்னியர்கள் அதிகளவில் வாழும் மாவட்டத்தில், இவர் ஆதிக்கம் செலுத்துவது வன்னியர்கள் மத்தியில் ஒரு மனக்குறையாக இருந்தாலும் திமுகவின் வாக்கு வங்கியை இத்தனை காலம் காப்பாற்றி வந்துள்ளார் என்பதும் உண்மைதான்.

ஆனால், மாவட்ட அரசியலில் அதிமுக மாவட்ட செயலாளரான சி.வி.சண்முகத்துடன் சமரச அரசியல் செய்கிறார் என்பது இவர் மீது இருக்கும் குற்றச்சாட்டு. 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ஒதுக்கி சி.வி.சண்முகம் எளிதாக வெற்றி பெற செய்துவிட்டார் என்பதே இவர் மீது உள்ள குற்றச்சாட்டு, அதேபோன்று சி.வி.சண்முகமும் பொன்முடி போட்டியிடும் திருக்கோவிலூர் தொகுதியை பாஜகவிற்கு ஒதுக்கி பொன்முடிக்கு இலகுவான சூழலை உருவாக்கினார் என்பதும் உண்மை. மேலும் மாவட்ட அரசியலில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரான மருத்துவர் லட்சுமணனை முன்னிறுத்துவதற்கு ஏற்ற சூழலும் உருவாகியுள்ளது. லட்சுமணன் வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது’ என்றார் அவர்.



# கோவிந்தா.. நாராயணா..






வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, கோவில்களில் சொர்க்க வாசல் திறக்கப்பட்டது. பக்தர்கள் பலர் சொர்க்க வாசல் வழியாக சென்று ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீநிவாச பெருமாளை வணங்கினார்கள். (முதல் படம்) பாப்பநாயக்கன்பாளையம், ஸ்ரீநிவாச பெருமாள் கோவில், (இரண்டாம் படம்) ஜெகநாதர் பெருமாள் கோவில், (மூன்றாம் படம்) உக்கடம், நரசிம்மர் கோவில், (நான்காம் படம்) பீளமேடு, கரிவரதராஜ பெருமாள் கோவில்.

## கோ - ஆப்டெக்ஸில் சிறப்பு தள்ளுபடி



வ.உ.சி. பூங்கா அருகில் உள்ள மருதம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் சிறப்புத் தள்ளுபடி விற்பனை துவக்க விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வை கிறிஸ்து அரசர் ஆலய அருட்தந்தை ஆரோக்கியசாமி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். கோ ஆப் டெக்ஸின் முதுநிலை மண்டல மேலாளர் நந்தகோபால், முதுநிலை மேலாளர் (இரகம் & பகிர்மானம்) ஜெகநாதன், கோ-ஆப்டெக்ஸ் மருதம் விற்பனை மேலாளர் செல்வன் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் அலுவலகப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## தேசியக் கருத்தரங்கு



இந்துஸ்தான் கலை, அறிவியல் கல்லூரியின் கணினி அறிவியல் துறைகள் இணைந்து தேசிய அளவிலான கருத்தரங்கை நிகழ்த்தின. முதல்வர் பொன்னுசாமி, பெங்களூரு ரேவா பல்கலைக்கழகம் கணினி அறிவியல் மற்றும் பயன்பாடுகள் துறைப் பேராசிரியர் – இயக்குநர் செந்தில், இன்டெல்லிபர் சிஸ்டம்ஸ் நிறுவனர் மற்றும் தலைமைத் தொழில்நுட்ப அதிகாரி யோதேஷ்குமார், கணினி தொழில்நுட்பத் துறைத் தலைவர் ரங்கராஜ், உதவிப்பேராசிரியர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தேசிய எறிபந்து போட்டிக்குத் தேர்வாகிய பெண் பணியாளர்கள்

# ‘பெண்களை ஊக்குவிக்கும் நிறுவனம் கே.பி.ஆர்.’




✍ தி கோவை மெயில்

கோயமுத்தூர், தெக்கலூரில் இயங்கிவரும் கே.பி.ஆர். நிறுவனத்தில் ஆயரத்திற்கும் மேற்பட்ட பெண் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். பெண்களுக்கு முன்னுரிமை வழங்கும் இந்நிறுவனத்தில் கல்வி மட்டுமின்றி விளையாட்டிலும் அவரவர் திறன்களை வெளிக்கொணர வேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு பயிற்சிகள், உதவிகள் வழங்கப்படுகிறது.

அந்த வகையில், ஜார்கண்ட் மாநிலத்தில் வருகிற டிசம்பர் 27, 29 ஆகிய தேதிகளில் 46வது சீனியர் நேஷனல் த்ரோபால் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியில், கே.பி.ஆர். பெண் பணியாளர்கள் பிரிவைச் சேர்ந்த 9 பணியாளர்கள் தேர்வாகி உள்ளனர். தமிழ்நாடு அணி சார்பில் வைஷ்ணவி, ஷிவானி, நீளு மற்றும் பாண்டிச்சேரி அணி சார்பில் ரஜினி, ரீமா, பிங்கி, தீபிகா, ஆஷா, பாரதி ஆகியோர் விளையாட உள்ளனர்.

தமிழ்நாடு அணி சார்பாக விளையாடவுள்ள திருப்பத்தூரைச் சேர்ந்த வைஷ்ணவி, குடும்பச் சூழல் காரணமாக 11 ஆம் வகுப்போடு தன் படிப்பைத் தொடர முடியாமல் கே.பி.ஆர். நிறுவனத்தில் பணியாளராகச் சேர்ந்திருக்கிறார். பின்பு, நிறுவனத்தின் ஊக்குவிப்பால் உடற்கல்வியில் டிப்ளமோ படித்து முடித்திருக்கிறார். கூடவே, எறிபந்து விளையாட்டிலும் பயிற்சி பெற்றுள்ளார். மேலும், தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக கே.பி.ஆர். நிறுவனத்திற்கு இடையில் நடத்தப்படும் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளது இவரின் குழு.

இதனையடுத்து, தேசிய விளையாட்டுப் போட்டியில் தேர்வாகியுள்ளது குறித்து நம்மிடம் பேசிய அவர், ’கே.பி.ஆர். நிறுவனம் என்னைப் போன்ற பெண்களை ஊக்குவித்து, தனிக் கவனம் செலுத்தி திறமைகளை வெளிக்கொண்டுவரப் பின்புலமாகச் செயல்படுகிறது. எங்கள் நம்பிக்கையின் திறவுகோலாக இருக்கும் நிறுவனத் தலைவர் கே.பி.ராமசாமி அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடன்பட்டி ருக்கிறோம். விளையாட அனுமதித்து, அனைத்து செலவுகளையும் பொறுப்பேற்று வழிநடத்தும் நிறுவனப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றிகள்’ என்றார்.

## சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா



கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் பள்ளிக் குழந்தைகளுடன் பள்ளிச் செயலர் சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன்.

✍ தி கோவை மெயில்

சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தொடக்க நிகழ்வாக, குழந்தை இயேசுவின் பிறப்பினைச் சித்தரிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அரங்கில், இயேசுவின் பிறப்பை உலகிற்கு அறிவிக்கும் நிகழ்வினை பள்ளி மாணவ மாணவியர் நிகழ்த்தினர். கோயம்புத்தூர் கங்கா சுகாதார அறிவியல் கழகத்தின் முதல்வர் மற்றும் டீன் டாக்டர் எஸ்தர் ஜான் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அவரின் வாழ்த்துரையில், ’இறைவனின் கருணை நமக்குக் கிடைக்க நாம் அவரிடத்தில் சரணடைய வேண்டும். அருளையும் அறிவையும் பெற, படிக்கத் தொடங்கும் முன் இறைவனிடத்தில் மனதார வேண்டிக்கொள்ள வேண்டும். நம்முடைய மனதைக் கோயில்போல வைக்க வேண்டும். மனதைப் பாழாக்குகின்ற எண்ணங்களிலிருந்து விலகி இருக்கப் பழக வேண்டும். பள்ளிப்பருவத்திலிருந்தே விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிகளைத் தவறாது மேற்கொண்டால் நமது ஹார்மோன்கள் தூண்டப்பட்டு உடல், மன உறுதியினையும் மகிழ்ச்சியான வாழ்வையும் பெறலாம். அனைவருக்கும் கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்’ என்றார்.

**பள்ளிச் செயலர் சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் தலைமை உரையாற்றுகையில்,** ’உன்னை நீ நேசி, உன் அருகிலிருப்பவரையும் நேசி, மறப்போம், முன்னேறுவோம் என்பதனை மனதில் கொண்டு நாம் நம் வாழ்க்கையை அமைக்க வேண்டும். நல்ல எண்ணங்களைக் கொண்டிருந்தால் நல்ல ஆற்றல் உருவாகும். தீய எண்ணங்கள் கொண்டிருந்தால் நம்மிடமிருந்து நல்ல ஆற்றல் குறைந்துகொண்டே போகும்.

எப்போதும் எல்லோரையும் மதிக்க வேண்டும். பெற்றோர்களுக்கு நன்றி செலுத்தத் தவறக்கூடாது. மற்றவர்களின் துயரங்களை துடைக்கத் தொடங்கிவிட்டால், உங்களுக்கு இறைவன் மன உறுதியையும் ஆற்றலையும் வழங்குவான்’ என்றார்.

சிறப்பு நிகழ்வாக, பள்ளி ஆசிரியர்கள் ’சான்டாகிளாஸ்’ கிறிஸ்துமஸ் வேடமணிந்து தோன்றியதுடன் மாணவ மாணவியருக்கும் இனிப்பு வழங்கினர். துணை முதல்வர் சக்திவேல் வரவேற்புரையாற்றார். கல்வி ஆலோசகர் கணேசன் பைபிள் வசனத்தை வாசித்தார்.

## சாலைப் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவு

✍ தி கோவை மெயில்



கோவை மாநகராட்சியில் பல்வேறு பகுதிகளில் சாலைகள் சேதமடைந்துள்ளன. இந்நிலையில் தெற்கு மண்டலம் வார்டு எண்.76 க்குட்பட்ட செல்வபுரம், சோமு கார்டன் பகுதியில் மாநில நிதி கழக திட்டத்தின்கீழ் ரூ.79 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 13 சாலைகள் பணிகளை விரைவில் செய்து முடிக்க மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் சம்பந்தப்பட்ட பொறியாளருக்கு உத்தரவிட்டார்.

இதில் துணை மேயர் வெற்றி செல்வன், செயற்பொறியாளர் கருப்பசாமி, உதவி செயற்பொறியாளர் கனகராஜ், உதவிப் பொறியாளர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.




யோகக் கலாச்சாரத்தில் சூத்திரங்களின் முக்கியத்துவத்தை விவரிக்கும் சத்குரு, ”மங்கல நாண்” மற்றும் அதன் பின்னணியில் உள்ள விஞ்ஞானத்தை இங்கே வெளிப்படுத்துகிறார்..

சூத்திரங்களின் அர்த்தம்

சத்குரு: சூத்திரம் என்ற சொல்லுக்கு, கயிறு அல்லது நூல் என்பது பொருள்.. இந்தச் சொல்லானது யோக சூத்திரங்கள் மற்றும் சிவ சூத்திரங்கள் போல, செய்முறை அல்லது அடிப்படையான ஒன்று என்ற அர்த்தத்திலும் பயன்படுத்தப்படுகிறது, இதில் உள்ள விஞ்ஞானத்தை பார்ப்போம். எனது கையில் ஒரு நிமிடம் நான் பிடித்திருந்த செம்புத் தகடு ஒன்றை, அதன் பிறகு நீங்கள் தொடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் சிறிது உணர்வுடையவர் என்றால், அது முற்றிலும் வித்தியாசமான முறையில் அதிர்வதை நீங்கள் உணர்வீர்கள்.. ஆனால் ஒரு தகட்டினால் இந்த சக்தியை தக்கவைத்துக்கொள்ள முடியாது. இதே செம்பு உலோகத்தை வேறுவிதமாக வடிவமைத்திருந்தால், அது அதிர்வுகளை நீண்ட நேரம் தக்கவைத்துக்கொள்ளும்.. வடிவத்துக்கும், பயன்படுத்தப்படும் பொருளுக்கும் ஒரு முக்கியத்துவம் உள்ளது.

படைப்பிலிருப்பவற்றின் அடிப்படையான வடிவமைப்பை நவீன விஞ்ஞானம் அடையாளம் காண ஆரம்பித்துள்ளது. உதாரணத்திற்கு, பாய்ந்தோடும் நீர்த்தடங்கள் உருவாக்கும் வடிவங்களுக்கும், ,பாலைவனத்தின் மணலில் உருவாகும் வடிவங்களுக்கும் இடையே ஒரு ஒற்றுமை உள்ளது. ஒரு நதி எப்படிப் பாய்கிறது என்பதற்கும் ,மனித உடலமைப்பு எப்படி உருப்பெறுகிறது என்பதற்கும் இடையிலும் கூட ஒரு நேரடியான தொடர்பு உள்ளது. படைப்பிலிருக்கும் எல்லாவற்றின் அடிப்படை வடிவமைப்பும் ஒரேமாதிரி இருக்கிறது.. அவைகளின் சிக்கலான மற்றும் நுட்பமான விஷயங்களில் மட்டும்தான் ஒவ்வொன்றும் வித்தியாசப்படுகின்றது. சில வடிவங்களால் மற்றதைவிட அதிகநேரம் சக்தியைத் தக்கவைத்துக்கொள்ள முடிகிறது. இதன்படி பார்த்தால், ஒரு நீள்வட்டம் சிறந்த வடிவமாக இருக்கிறது. மிகச்சரியான ஒரு நீள்வட்ட வடிவம், ஐந்து முதல் பத்தாயிரம் வருடங்களுக்கு சக்தியைத் தக்கவைத்துக்கொள்ள முடியும், இதுமனித உணர்வில் எல்லையற்றது.

சக்தியை சேமித்துவைப்பதற்கான பொருட்கள்

பலவகையான பொருட்களை நாம் சக்தியூட்டமுடியும் பட்டுத்துணி அதற்கான ஓர் உதாரணம். லிங்கபைரவி சன்னிதியில் ஒரு குறிப்பிட்ட முறையில் சக்தியூட்டப்பட்ட சேலையை நீங்கள் அணிந்துகொண்டால், அது உங்களை முற்றிலுமான ஒரு பரவச நிலையை அடையச்செய்யும், சிறிது காலம் அது லிங்கபைரவி சன்னிதியில் வைக்கப்பட்டதே இதற்குக் காரணம். பட்டு, தூய பருத்தி, மற்றும் செம்பு ஆகியவை, சக்தியைத் தக்கவைத்துக்கொள்வதில் மிகவும் சிறந்தவை. பாதரசம் மிகச்சிறந்தது. ஆனால் போதிய நிலையிலான சாதனா இருந்தால் மட்டுமே பாதரசத்தைப் பயன்படுத்தவேண்டும்.

ஒரு நூலை, சூத்திரமாகமாற்றுவதுஎது?

பருத்தி நூல் சக்தியை சேமித்துவைப்பதற்கான ஒரு பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது, ஏனெனில் அது சாதாரணமாகக் கிடைப்பது, மலிவானது என்பதுடன் குறிப்பிட்ட காலத்திற்கு அது மிக நன்றாகச் செயல்படுகிறது. சக்தியை உள்வாங்கும் அதன் திறனை மேம்படுத்துவதற்காக, மஞ்சள் போன்ற குறிப்பிட்ட மற்ற பொருட்களை நாம் பயன்படுத்துகிறோம்

மஞ்சளின் முழுமதிப்பு மற்றும் மஞ்சளின் மந்திரவித்தையை நவீன சமூகங்கள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. அதன் ஒரஅம்சம், செரிமான மண்டலத்திலிருந்து சிறியளவிலான கிருமித் தொற்றுகளை நீக்குகிறது, மேலும், ஒரு குறிப்பிட்ட அளவு மஞ்சளும் நெய்யும் சருமத்தைப் ஒளிவீச வைக்கிறது. அழகை மெருகூட்டக்கூடிய மஞ் சளின் இயல்பினால் மட்டும் ஒளிரவில்லை. ஒளி உடலை மஞ் சள் தூய்மைப்படுத்துகிறது.

நோய் எதிர்ப்பு மண்டலம் உள்ளிருந்து மட்டும் செயல்படுவதில்லை. உங்களது நோய் எதிர்ப்பு மண்டலம் உங்களைச் சுற்றி நீங்கள் உருவாக்கும் சக்தி அடுக்கையும் சார்ந்திருக்கிறது. உங்களைச்சுற்றிலும் ஒருவகையான அதிர்வை மஞ் சள் உருவாக்குகிறது, ஒளி உடலின் இயல்பை மாற்றுகிறது, முகத்தை ஒளிரச் செய்கிறது மற்றும் உங்கள் நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது. மஞ்சளின் மற்றொரு அம்சம் என்னவென்றால், அதன் வழியே சிரமம் இல்லாமல் சக்தியைக் கடத்த முடியும். சக்தியை கிரகித்துக்கொள்ளும் ஒரு நூலின் திறனை மஞ்சள் மேம்படுத்துகிறது.



தொடரும்...

## இந்தியாவின் சிறந்த 5 கல்லூரிகளில் ஒன்று


# குமரகுரு கல்லூரிக்கு தேசிய விருது

✍ தி கோவை மெயில்

மனித சமூகத்தைப் பொறுத்தவரை ஒரு விருது என்பது மதிப்பு மிக்க ஒன்று. ஒரு தனி மனிதரோ, ஒரு நிறுவனமோ பாராட்டுப் பெற்று விருது பெறும் பொழுது அந்த துறை சார்ந்த சாதனை பாராட்டப்படுகிறது; அது ஒரு அங்கீகாரமாக மாறுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக வாங்குபவருக்கு பெருமையும், ஊக்குவிப்பும் அளிப்பதோடு, மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டுதலையும் உந்துதலையும் அளிக்கிறது. அந்த வகையில் கோவையின் புகழ் மிக்க தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒன்றான குமரகுரு பொறியியல் கல்லூரி "தொழில் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நிறுவனம்" எனும் விருதினை புது டெல்லியில் நடைபெற்ற இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) கூட்டத்தில் டெக்னாலஜி கான்கிளேவ் அண்ட் இன்னோவேஷன் விருது பெற்று கோவைக்கு பெருமையை சேர்த்துள்ளது.

இன்னும் விரிவாகச் சொல்லப்போனால், "தொழில் மேம்பாட்டை ஊக்குவிக்கும் புதுமை ஆராய்ச்சி" திட்டத்தை செயல்படுத்தும் நாட்டின் சிறந்த ஐந்து நிறுவனங்களில் ஒன்றாக இந்த 2023 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு கோவை குமரகுரு பொறியியல் கல்லூரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்திய அளவில் புகழ்பெற்ற மற்ற நான்கு நிறுவனங்கள் பின்வருமாறு; இந்திய தொழில் நுட்ப நிறுவனம் ஐஐடி ரூர்க்கி, சிட்காரா பல்கலைக்கழகம், பஞ்சாப், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம், குவாலியர் மற்றும் வட இந்திய ஜவுளி ஆராய்ச்சி சங்கம் காசியா பாத் ஆகியன ஆகும்.

இந்த 2023 ஆம் ஆண்டின் பெருமைமிகு விருதுக்காக தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே கல்வி நிறுவனம் என்ற பெருமையையும் குமரகுரு பொறியியல் கல்லூரி பெறுகிறது. அதேபோல இது போன்ற தேசிய அளவிலான விருதை தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக பெறும் ஒரு கல்வி நிறுவனமாகவும் குமரகுரு பொறியியல் கல்லூரி திகழ்கிறது. கடந்த 2021 ல் புதுமை சிந்தனை தொழில் தொழில்நுட்பத் துறைக்கான கண்டுபிடிப்புக்கான விருது, 2022 நிறுவனங்களில் புத்தாக்க விருது, இந்த ஆண்டு 2023 மேம்பாட்டை ஊக்குவிக்கும் நிறுவனம் என்று தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக குமரகுரு கல்லூரி விருதுகளை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர்
தலைவர்



எம்.பாலசுப்ரமணியம்
தாளாளர்



சங்கர் வாணவராயர்,
துணை தாளாளர்



அருட்செல்வர் என்.மகாலிங்கம்

**இந்த 2023 ஆம் ஆண்டின் பெருமைமிகு விருதுக்காக தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே கல்வி நிறுவனம் என்ற பெருமையையும் குமரகுரு பொறியியல் கல்லூரி பெறுகிறது. அதேபோல இது போன்ற தேசிய அளவிலான விருதை தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக பெறும் ஒரு கல்வி நிறுவனமாகவும் குமரகுரு பொறியியல் கல்லூரி திகழ்கிறது.**



இதற்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது இந்த கல்லூரியை உருவாக்கிய கோவையின் அடையாளங்களில் ஒருவரான அருட்செல்வர் என்.மகாலிங்கம் அவர்களின் தொலைநோக்கு சிந்தனையும், செயல்பாடுகளும், முயற்சிகளும் ஆகும். 19 ஆம் நூற்றாண்டில் ஒரு விவசாய நிலமாக இருந்த கோவை 20 ஆம் நூற்றாண்டில் ஒரு தொழில் நகரமாக மலர்ந்தது. அது 21ம் நூற்றாண்டில் விரிவடைந்து கல்வி மருத்துவ நகரமாக மாறுவதற்கு கனவு கண்ட சில சான்றோர்களில் அவரும் ஒருவர். 20 ஆம் நூற்றாண்டில் இறுதியில் உருவான குமரகுரு பொறியியல் கல்லூரி அவரின் தலைமையின் கீழ் உறுதியான அடித்தளத்தை அமைத்துக் கொண்டது. அதன் பிறகு நிர்வாகத்துக்கு வந்த பி.கே. கிருஷ்ணராஜ வாணவராயர், எம். பாலசுப்ரமணியம் ஆகியோர் தலைமையில் அடுத்த தலைமுறை வளர்ச்சியை பெற்று நவீன பொறியியல் கல்லூரியாக உருவெடுத்தது. அதன் பிறகு நடந்ததெல்லாம் வரலாறு.

இளைய தலைமுறை நிர்வாகியாகவும், மாணவர்களின் மனப்பாங்குடன், இன்றைய கல்விச் சூழலும் அறிந்த சங்கர் வாணவராயர் அவர்களின் புத்தாக்க சிந்தனையும், தொலைநோக்கு பார்வையும், தொழில்,கல்வி, சமூகம் ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த அக்கறை, அறிவாற்றல் ஆகியவையும் சேர்ந்து இன்று குமரகுரு பொறியியல் கல்லூரியை ஒரு உன்னதமான பாதைக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கின்றன. அதற்கு கிடைத்திருக்கின்ற அங்கீகாரம் தான் இந்த விருதாகும். ஒரு பொறியியல் கல்லூரி என்பது மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதோடு நின்று விடாமல், நாட்டின் தொழில், பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும் வகையில் அமைவது அபூர்வம். அந்த வகையில் கோவை குமரகுரு பொறியியல் கல்லூரி அந்த பெருமையைப் பெறுகிறது. இந்த மூன்று விருதுகளோடு மென்மேலும் பெருமைகளையும் பெற்று விளங்க தி கோவை மெயில் வாழ்த்துகிறது.

---

## எஸ்.என்.எஸ் பொறியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா




எஸ்.என்.எஸ் பொறியியல் கல்லூரியில் 13 வது பட்டமளிப்பு விழா நடைப்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் காவல்துறை தலைமை இயக்குனர் சைலேந்திரபாபு சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டார். இதில் எஸ்.என்.எஸ் நிறுவனங்களின் தலைவர் சுப்பிரமணியன், தாளாளர் ராஜலட்சுமி, தொழில்நுட்ப இயக்குனர் நளின் விமல்குமார் ஆகியோர் தலைமை வகித்தனர். நிகழ்வில் மொத்தம் 237 கல்லூரி மாணவர்கள் பட்டங்களை பெற்றனர். முதலிடம் பெற்ற பட்டதாரிகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் சார்லஸ், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

---

## "திரை அச்சாக்கம்" பயிலரங்கம்...



வி.எல்.பி. ஜானகியம்மாள் கலை, அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத் துறை, நவீன ஆடை வடிவமைப்புத் துறை மற்றும் காட்சி தொடர்பியல் துறை ஆகியோர் இணைந்து "திரை அச்சாக்கம்" என்ற தலைப்பில் பயிற்சி பட்டறையை நடத்தினர். சிறப்பு விருந்தினராக கோவை நடராஜ் ஸ்கிரீன்ஸ் நிறுவன உரிமையாளர் கதிர்வேல் பங்கேற்று, ஸ்கிரீன் பிரிண்டிங்கில் ஈடுபடும் செயல்முறையைப் பற்றியும், திரையில் அச்சிடப்படும் பொருட்கள் மற்றும் திரை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் குறித்தும் எடுத்துரைத்தார். இப்பயிலரங்கின் மூலம் மாணவர்கள் பல்வேறு அனுபவங்களைப் பெற்றனர்.

---

## விழிப்புணர்வு பேரணி...




இந்துஸ்தான் நாட்டு நலப்பணித் திட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கோவை மின் பகிர்மான வட்டம் மற்றும் உயிரித் தொழில்நுட்பவியல் துறையின் சுற்றுச்சூழல் இயக்கம் ஆகியோர் இணைந்து மாணவர்களுக்கு இடையேயான மின் சிக்கனம் குறித்த விழிப்புணர்வுப் பேரணியை நிகழ்த்தினர். இதில் கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, கல்லூரி நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன், சிந்தனைக் கவிஞர் கவிதாசன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மேற்பார்வை பொறியாளர் நக்கீரன், தலைமைப் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் நா. சென்ராம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இப்பேரணியில் கல்லூரி மாணவர்கள் பலரும், கோவை மின் பகிர்மான வட்டம் மின் பொறியாளர்களும் கலந்துகொண்டனர்.

---

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில் சுற்றுச்சூழல் ஒப்பந்தம்

✍ தி கோவை மெயில்

ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் சிறுதுளி அமைப்பு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.



புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டி.லட்சுமிநாராயணசுவாமி, சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் உள்ளிட்ட பலர்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டி.லட்சுமிநாராயணசுவாமி, சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் ஆகியோர் கையொப்பமிட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சமூகப் பணியியல் துறை மாணவர்களுக்கு, சுற்றுச்சூழல் சார்ந்த விழிப்புணர்வு கல்வி கற்பிக்கப்படும். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, இயற்கைப் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்புத் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

திடக்கழிவு மேலாண்மை மற்றும் அதை அனைத்து தரப்பிலும் பயனுள்ள வகையில் செயல்படுத்தும் வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படும். மழைநீர் சேகரிப்பின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு கற்பிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், ஸ்ரீராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் சிவக்குமார், சமூகப் பணியியல் துறைத் தலைவர் பிரியதர்ஷினி, சிறுதுளி அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சின்னச்சாமி, சுஜினிபாலு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## ஐ.டி.எம்.எப். தலைவராக கோவை தொழிலதிபர் தேர்வு

✍ தி கோவை மெயில்

சர்வதேச ஜவுளி உற்பத்தியாளர் கூட்டமைப்பின் (ஐ.டி.எம்.எப்) தலைவராக கோவையைச் சேர்ந்த தொழிலதிபர் கே.வி.சீனிவாசன் தேர்வு பெற்றுள்ளார்.

சர்வதேச ஜவுளி உற்பத்தியாளர் கூட்டமைப்பு ஐ.டி.எம்.எப். என்பது 1904 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது பழமையான அரசு சாரா வர்த்தக நிறுவனங்களில் ஒன்றாகும். இது ஒட்டுமொத்த ஜவுளி மதிப்பு சங்கிலியின் 90 சதவீத உற்பத்தியை உள்ளடக்கிய கூட்டமைப்பாகும். சுருக்கமாக சொன்னால் பல வகையான பஞ்சு மற்றும் ஜவுளி பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில் துறையின் உலகளாவிய அமைப்பாக விளங்குகிறது.



தென் இந்திய பஞ்சாலைகள் சங்கத் தலைவர் சுந்தரராமன், பொதுச் செயலாளர் செல்வராஜ் ஆகியோர் கே.வி.சீனிவாசனுக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த கூட்டமைப்பின் தலைவராக தென்னிந்திய பஞ்சாலைகள் சங்க முன்னாள் தலைவரும் பஞ்சாலை தொழிலதிபருமான கே.வி.சீனிவாசன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது பொறுப்பேற்றுள்ளார்.

இவர் இந்தியாவில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் நான்காவது தலைவர் என்பதும், தென்னிந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம், தென்னிந்திய ஜவுளி உற்பத்தி ஆராய்ச்சி கழகம், பருத்தி ஜவுளி ஏற்றுமதி அபிவிருத்தி கழகம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்துள்ளார்.

இந்நிலையில் கோவையில் தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது. இதில் தென் இந்திய பஞ்சாலைகள் சங்கத் தலைவர் சுந்தரராமன் பொதுச் செயலாளர் செல்வராஜ் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர்.

இதுகுறித்து கே.வி.சீனிவாசன் கூறும்போது, 'ஐ.டி.எம்.எப். சார்பில் சர்வதேச ஜவுளி தொழில் புள்ளி விவரங்கள், சர்வதேச ஜவுளி இயந்திரங்களின் ஏற்றுமதி புள்ளி விவரங்கள், சர்வதேச உற்பத்தி செலவு ஒப்பீடு, பருத்தி மாசு அறிக்கை, உலக ஜவுளி தொழில் குறித்த கணக்கெடுப்பு உள்ளிட்டு சேவைகள் வழங்கப்படுகிறது.

இதன் உறுப்பினர்கள் சிறப்பு காணொளி கலந்துரையாடலில் பங்கேற்கவும் தொழில்துறை தலைவர்களுடன் சிறப்பு நேர்காணல் மூலம் விவாதம் செய்யவும் வாய்ப்பு அளிக்கிறது. ஜவுளி தொழில் அமைப்புக்கும் அரசுகளுக்கும் இடையே இந்த அமைப்பு பாலமாக விளங்குவதுடன் ஜவுளி தொழில் மேம்பாட்டுக்கு உதவும் அமைப்பாக இருக்கிறது' என்றார்.

# 100ல் ஒருவரால் மட்டுமே இயற்கை விவசாயம் சாத்தியமாகும்!



**பெரியசாமி, துணைத் தலைவர், தமிழ்நாட்டு விவசாய சங்கம், கோவை மாவட்டம்**

✍ தி கோவை மெயில்

வேகமாக சுழன்று கொண்டிருக்கும் இந்த அவசர உலகத்தில், அனைத்தும் கண் இமைக்கும் நொடிப் பொழுதில் நடந்திட வேண்டும் என வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்மிடம் எதற்கும் பொறுமை இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. தொழில்நுட்ப மேம்பாடு, செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி என அனைத்து துறைகளிலும் செயற்கை நுட்பங்கள் உட்புகுந்து விட்டன. இதில், விவசாயத் துறை மட்டும் விதிவிலக்கா என்ன.?

இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்த்து, விவசாயம் செய்துவந்த காலங்கள் கடந்து, நேற்று விதை விதைத்து இன்று அறுவடை செய்யும் காலமாக மாறிவிட்டது இன்றைய நிலை. இயற்கை விவசாய முறைகளும், அதில் இருக்கும் சவால்களும் குறித்து நம்மிடம் விவரிக்கிறார் தமிழ்நாட்டு விவசாயச் சங்க கோவை மாவட்டத் துணைத் தலைவர் பெரியசாமி.

**இயற்கையைவிட்டுப் பின்தங்கி விட்டோம்**

இயற்கை சூழலுக்குத் தகுந்த மாதிரி மண் வளமானது மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டு வருகிறது. இயற்கையான சூழல் மாறி செயற்கையான சூழலில் விவசாயம் செய்ய வேண்டிய அவல நிலையில்தான் விவசாயிகள் இருக்கின்றனர். இத்தகைய காலமாற்றங்களைக் கருத்தில் கொண்டு விவசாயிகளும் அதனை எதிர்நோக்கி செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

பருவத்தில் பயிர் செய்; ஆடிப் பட்டம் தேடி விதை என்பது முன்னோர் சொல். இதை அவர்கள் சும்மா சொல்லிவிட்டுச் செல்லவில்லை. அந்தந்த பருவ காலத்தில், நாட்டு விதைகளை விதைத்துப் பயிர் செய்தால் அதற்கான வீரியத் தன்மை அதிகம். ஆனால், இன்று அதிக மகசூல் கிடைக்கும் என்பதற்காக கலப்பின விதைகள் அதிகளவில் வந்துவிட்டன. நாட்டுக் காய்கறிகளிலும் கலப்பினம் உள்ளது. என்னதான் அரசாங்கம் இயற்கை சார்ந்து திட்டங்களை வகுத்தாலும்கூட, அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் அதிகம் உள்ளன.

என்றைக்கு ஆடம்பரத்தை விரும்ப ஆரம்பித்தோமோ, அன்றே இயற்கையைவிட்டு நாம் பின்தங்கி விட்டோம். எந்த காய்கறிகளைச் சாப்பிட்டால் உடலுக்குக் கேடு, நல்லது என்று தெரியாமல் சாப்பிட்டு வருகிறோம். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், ரசாயனம், பூச்சிக் கொல்லி மருந்துகள் இல்லாமல் விவசாயிகள் விவசாயம் செய்வது இல்லை.

100ல் ஒரு விவசாயி மட்டுமே இயற்கை விவசாயம் செய்ய முடியும் என்பது என் தனிப்பட்ட அனுபவத்தில் கண்ட உண்மை. இயற்கை விவசாயத்தில் பருவநிலை மாற்றம் முக்கியப் பங்காற்றுகிறது. தக்காளி, கத்திரி போன்ற காய்கறிகளில் கலப்பின விதைகள் அல்லாத, இயற்கையாக விதைகளை விதைக்கும்போது அதனை பராமரிப்பதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இதன் காரணமாகவே, நர்சரியில் நாற்று வாங்கி நடவும் நிலையில் இருக்கின்றோம். இந்த நிலையில் செயற்கையை நோக்கிச் செல்லுவதைத் தவிர இயற்கைக்குத் திரும்பும் நிலை தற்போது வரை இல்லை.

நாட்டுக் காய்கறிகள் அதிக வீரிய சத்துக்கள் கொண்டது. ஆனால், இதன் உற்பத்தி மிகவும் குறைவு. அதேவேளையில், ஹைபிரிட் காய்கறிகள் 4 மடங்கு உற்பத்தி அதிகம் என்பதால் ஹைபிரிட் விதைகளை நாடிச் செல்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு காய்கறிகளில் புழுக்கள் இருந்தால் அது இயற்கையானது. ஆனால், நடைமுறையில் விவசாயிகளின் நிலையிலிருந்து பார்க்கும்போது, செட்டிகளில் புழுக்கள் பரவினால், பூக்கள், காய்களைப் பாதிப்பது மட்டுமல்லாமல் உற்பத்தியையும் பாதிக்கும் என்பதால் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். இதனால், மண் வளத்தின் இயற்கை தன்மை அழிந்து ரசாயனம் ஊடுருவுகிறது.

நாட்டுத் தக்காளி இரண்டு நாளில் வெடித்துக் கெட்டுப் போய்விடும். அதுவே, கலப்பின (ஹைபிரிட்) காய்கறிகள் என்றால் ஒரு வாரம் ஆனாலும் கெட்டுப் போகாது.

**தானிய வகைகளின் விலை உயர்வுக்கு காரணம்?**

எள்ளு, கம்பு, சோளம், கேழ்வரகு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப் பயிறு உள்ளிட்ட தானியங்கள் வானம் பார்த்த பூமியில் உற்பத்தி செய்து கொண்டிருந்தோம். தானிய சாகுபடிக்கு உற்பத்தி செலவுகள் அதிகம் என்பதால் இன்றைய நிலையில் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிறுதானிய விவசாயம் சொற்ப அளவில் விளைவிக்கப்படுவதே விலை உயர்வுக்குக் காரணம். தற்பொழுது, ஹைபிரிட் தானியங்கள் மட்டுமே அதிகளவில் சந்தைப்படுத்தப்படுகிறது. சிறுதானிய உணவுகள் உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது என்று விலை அதிகம் கொடுத்துச் சாப்பிடுகிறோம். ஆனால், அது இயற்கையானதா? செயற்கையானதா? என்று பார்ப்பதில்லை.

இயற்கை சார்ந்த உணவும்; இயற்கை சார்ந்த விவசாயமும் முழுமையாக நடைமுறையில் இல்லை. ஏதேனும், ஒரு வகையில் ரசாயன கலவைகளை சேர்ப்பதாகவே இருக்கிறது. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு?

## குடியரசு தின அணிவகுப்பு: ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி மாணவி தேர்வு




புதுடெல்லியில் நடைபெற உள்ள குடியரசு தினவிழா அணிவகுப்பு நிகழ்ச்சிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி என்.வி.பவ்யாவை, எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டி.லட்சுமிநாராயணசுவாமி பாராட்டினார். உடன், கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் எஸ்.பிரகதீஸ்வரன் ஆகியோர்.

## ஃபிளாட் பத்திரப் பதிவு : உதயநிதியிடம் கோரிக்கை

✍ தி கோவை மெயில்

அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஃபிளாட் வாங்குபவர்கள் பத்திரப்பதிவு செய்யும் முறையில் தமிழ்நாடு அரசு டிசம்பர் 1ம் தேதியிலிருந்து மாற்றம் செய்துள்ளது.

இதுவரை அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ஃபிளாட் வாங்குபவர்கள் ”பிரிபடாத பாக நில விற்பனைக்கு” ஒரு பத்திரப் பதிவும், வாங்கும் ஃபிளாட்டின் ”கட்டுமான ஒப்பந்தத்திற்கான” மற்றொரு பத்திரப்பதிவும் என இரு பத்திரப் பதிவுகளை செய்து வந்தனர்.

புதிய பத்திரப்பதிவு முறையில் கட்டணம் பல மடங்கு உயர்வு

புதிய முறையில், நிலத்திற்கும் கட்டுமான ஒப்பந்தத்திற்கும் சேர்த்து மொத்தமாக 7% பதிவுக் கட்டணம் செலுத்து வேண்டியுள்ளது. மேலும் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ஏரியா வாரியாக கைடுலைன் மதிப்பை அரசு நிர்ணயித்துள்ளது. இதனால் பிளாட் வாங்குபவர்கள் பழைய முறையைவிட மூன்று முதல் ஐந்து மடங்கு அதிகப் பதிவுக் கட்டணம் கட்ட வேண்டியுள்ளது. இது நடுத்தர மக்களுக்கு வீடு வாங்குவதை பெரும் சுமையாக்கி அவர்கள் வீடு வாங்குவதை அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாக ஆக்கியுள்ளது. இதனால் கட்டுமானத் துறை பெரும் பாதிப்பை சந்தித்துள்ளது.



கோவை கிரெடாய் அமைப்பின் தலைவர் குகன் இளங்கோ, ஃபிளாட்டிற்கான பழைய பத்திரப் பதிவு முறையை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்தார்.

இது தொடர்பாக கோவை கிரெடாய் அமைப்பின் தலைவர் குகன் இளங்கோ, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்து புதிய பத்திரப் பதிவு முறையைப் பின்பற்றுவதினால் ஏற்படும் அதிகமான பாதிப்புகள் பற்றி எடுத்துரைத்து மீண்டும் பழைய இரு பத்திர பதிவு முறைக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்தார். இதுகுறித்து உதயநிதி ஸ்டாலின் ஆலோசித்து ஆவண செய்வதாகத் தெரிவித்தார்.

# தமிழகத்தின் ‘ஏழாவது பசிலிக்கா’

## கோவையில் மரியாவின் புகழ் ஓங்கும் ஆலயம்

✍ வெ.சீ.அனிஷா, தி கோவை மெயில்

கோயம்புத்தூர் மாவட்டம் அருகே கருமத்தம்பட்டியில் புனித ஜெபமாலை அன்னையின் பசிலிக்கா தேவாலயம் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பிரசித்தி பெற்ற ஒரு கத்தோலிக்க தேவாலயமாகும்.

சென்னை சாந்தோம் பேராலயம், வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை திருத்தலம், தூத்துக்குடி பனிமய மாதா பேராலயம், தஞ்சாவூர் பூண்டி மாதா பசிலிக்கா, திருச்சிராப்பள்ளி உலக இரட்சகர் பெருங்கோவில், புதுச்சேரி புனித இருதய ஆண்டவர் பசிலிக்கா ஆகிய ஆறு பேராலயங்கள் வரிசையில் ஏழாவதாக இந்த பேராலயம் உள்ளது.

1608 10 க்கும் இடைப்பட்ட காலத்தில் அருட்தந்தை பல்தசார் அவர்களால் கருமத்தப்பட்டியில் இந்த தேவாலயம் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், இவரும் உபதேசியாரும் இங்கு சில மாதங்கள் தங்கி மறைப்பணி ஆற்றியுள்ளனர். மேலும் இவர்கள் அடிக்கடி இங்கு வந்து சென்றதற்கும் குறிப்பு உள்ளது.

மேலும், 1640 யில் இந்த தேவாலயம் திருத்தலமாக இருந்ததாகவும், 1967 களில் கோட்டையை உள்ளடக்கிய பேராலயமும், கோட்டைக்கு வெளியே சிற்றாலயம் இருந்ததாகவும் குறிப்பு உள்ளது . இதுவே கோவை மாவட்ட கிறிஸ்துவ மக்களின் இறை நம்பிக்கை வளர்ந்த இடமாக அமைகிறது. பின்பு ஒவ்வொரு காலகட்டத்திலும் புதுப்பிக்கப்பட்ட இந்த தேவாலயம் பல்வேறு முயற்சிகளுக்கு பிறகு ஜூலை 2, 2019 ஆம் ஆண்டில் கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தையான போப் பிரான்சிஸ் அவர்களால் பசிலிக்கா என அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் இந்த ஆலயம் தமிழகத்தில் உள்ள ஏழாவது பசிலிக்காவாக அமைகிறது.

விண்ணப்பங்களை நிறைவேற்றும் ‘அன்னை’

இந்த புனித ஜெபமாலை அன்னை தேவாலயம், இயேசுவின் தாயான அன்னை மரியாளுக்கு வணக்கத்தையும் புகழையும் தரக்கூடிய சிறந்த இடமாக அமைகிறது. இது கோவை மாவட்டத்தின் வரலாற்றில் மிகவும் சிறப்புக்குரிய ஆலயமாக திகழ்கிறது. மதம், இனம், ஜாதி, மொழி கடந்து அன்னையின் பரிந்துரை தேடி மக்கள் தினந்தோறும் இங்கு வருகை புரிகின்றனர்.

குழந்தைப் பேறு, திருமண பாக்கியத் தடைகள் நீங்குவதற்கும், தொழில் வளர்ச்சி எனப் பல்வேறு கோரிக்கைகளுக்காக பக்தர்கள் அன்னையிடம் மன்றாடுகிறார்கள். அன்னையும், தன் மகனான இயேசுவிடம் பரிந்து பேசி மக்களுக்கு அருள் ஆசிகளையும், விண்ணப்பங்களையும் நிறைவேற்றிக் கொடுப்பதாகக் கூறுகிறார்கள்.

அக்டோபர் ஏழாம் தேதி புனித ஜெபமாலை அன்னையின் திருநாளாகக் கருதப்படுகிறது. அதனை முன்னிட்டு ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையில் ‘ஆண்டு தேர் திருவிழா’ நடைபெறுகிறது. இது சுமார் 365 ஆண்டுகளுக்கு மேலாக கொண்டாடப்படுகிறது. இவ்விழாவிற்கு கோவை மாவட்டத்திலிருந்து மட்டுமில்லாமல் ஈரோடு, திருப்பூர், ஊட்டி போன்ற இடங்களிலிருந்தும், கேரள மாநிலம் பாலக்காடு, திருச்சூர் ஆகிய பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் தங்களின் வேண்டுதல்களை செலுத்துவதற்காக அன்னையின் பரிந்துரையைத் தேடி இந்த ஆலயத்திற்கு வருகின்றனர்.

கிறிஸ்துமஸ் விழா:

இத்தகைய சிறப்பு பெற்ற இந்த பேராலயத்தில் கிறிஸ்துமஸ் பிறப்பு பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. டிசம்பர் 24 ஆம் தேதி இரவு 11 மணிக்கு கிறிஸ்துமஸ் கரோல்ஸ் என்ற கிறிஸ்து பிறப்பின் பாடல்கள் பாடப்படுகின்றன.

தொடர்ந்து நள்ளிரவு 12 மணிக்கு கிறிஸ்து பிறப்பு பெருவிழாவின் திருப்பலியானது நடைபெறுகிறது. அந்த திருப்பலியிலேயே உலக அமைதிக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், உலகில் போர்கள் இல்லாமல் மக்கள் சமாதானத்துடனும், சமத்துவத்துடன் வாழ்வதற்காகவும் இறைவனுடைய ஆசியை வேண்டி அந்த திருப்பலியில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. அவ்வேளையில் இங்கு வரும் பக்தர்கள் மதம், இனம், ஜாதி, மதம், மொழிகளைக் கடந்து ஒன்றுகூடி கிறிஸ்து பிறப்பின் ஆசிகளை புனித ஜெபமாலை அன்னை திருஆலயத்திற்கு சென்று ஆசிகளை பெற்று செல்வார்கள்.

### ‘எவை பசிலிக்கா?’


ஆசியா கண்டத்திலேயே அதிக கத்தோலிக்கப் பேராலயங்களைக் கொண்ட நாடு இந்தியாவாகவும், இந்தியாவில் அதிக பேராலயங்களைக் கொண்ட மாநிலமாக கேரளாவும், அதற்கு அடுத்து தமிழகமும் உள்ளன.

பேராலயம் என்பது கத்தோலிக்க திருச்சபையின் ஆலயங்கள் சிலவற்றிற்கு அளிக்கப்படும் பட்டமாகும். இப்பட்டம் திருச்சபை சட்டப்படி திருப்பீடத்தாலோ அல்லது மிகவும் பழைய மரபின் அடிப்படையிலோ மட்டுமே வழங்கப்படுகிறது.

இவ்வகை ஆலயங்கள் இரண்டு வகைப்படும். இளம் பேராலயங்கள் மற்றும் உயர் பேராலயங்கள். உலகில் நான்கு உயர் பேராலயங்கள் மட்டுமே உள்ளன. அவை அனைத்தும் உரோமையில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அவை இலாத்தரன் யோவான் முதன்மைப் பேராலயம், புனித பேதுரு பேராலயம், புனித பவுல் பேராலயம் மற்றும் புனித மரியா பேராலயம்.

இவை தவிர, இந்தியா உட்பட உலகின் பிற பேராலயங்கள் அனைத்தும் இளம் பேராலயங்களாகும் (Minor Basilica).





## PSG iTech holds conference on Cyber Physical Systems



*(from left to right) Dr Vijayakumar, HoD/ ECE, Dr N Saravanakumar, principal (I/C), Dr Rudhramurthy, Director- PSG CARE, Dr C L Vasu, Dean, Academics, and Dr Vetrivelan , professor/ ECE release the conference proceedings.*

The Covai Mail

PSG Institute of Technology organised the 2023 IEEE Technically Sponsored International Conference on Intelligent Technologies for Sustainable Electric and Communications Systems on December 18 and 19. This conference provided a common platform for faculty members, researchers, industry experts and students to discuss the advances in recent trends of electric and communication systems, with emphasis on Cyber Physical Systems.

R. Rudramoorthy, Director - PSG CARE, participated as the chief guest. The keynote speakers were Wasif Naeem, Associate Professor, School of Electronics, Electrical Engineering and Computer Science, Queen's University Belfast, UK and Gunasekaran Thangavel, Professor, University of Technology and Applied Sciences, Muscat.

Out of 328 papers submitted, 105 were accepted for presentation.

## KMCH- COT organises one day seminar

The Covai Mail

KMCH College of Occupational Therapy organised a one day, state-level Seminar on Neonatal Nurturing: Exploring OT in NICU, on December 15, 2023. The seminar was attended by 270 participants, including Occupational Therapy students and professionals from various hospitals and colleges.

Dr. Thavamani D Palaniswami -Managing Trustee- Dr NGP R and ET inaugurated the event, followed by informative sessions from Dr. Balakrishnan,Neonatologist, KMCH and Dr. Abiramalatha,Neonatologist. KMCH on NICU challenges and high-risk infant management. Mrs. Geetha M Arora ,Neonatal and Paediatric Occupational Therapist, Move and Grow, New Delhi and Alumnus of KMCH provided valuable insights into the pivotal role of occupational therapists in the NICU, covering theories, common medical conditions, observation, and practical interventions.

The seminar facilitated interactive discussions, case studies, and demonstrations, ensuring a solid foundation in neonatal occupational therapy. Later, a poster competition on "Occupational Therapy in Neonatology: A Holistic Approach" engaged 12 teams from various colleges, fostering collaboration and showcasing the students' understanding of holistic approaches in neonatal care. This holistic event effectively combined theoretical knowledge with practical application, enhancing the participants' expertise in neonatal occupational therapy.



*Dr.Shashidhar Rao-Principal KMCH College of Occupational Therapy presenting a memento to Mrs.Geeta M Arora - Resource Faculty of Neo Natal Seminar in the presence of Prof Sujata Missal- Director (KMCH College of Occupational Therapy)*

## SRIPMS signs MoU with Eazylink Academy

The Covai Mail

On 20th December, Sri Ramakrishna Institute of Paramedical Sciences, Coimbatore inked an MoU with Eazylink Academy to organize a career development conclave on "INSIGHTS 2K23"- Domestic and International opportunities with scholarships and placement.

T.K. Ravi, Principal, College of Pharmacy, SRIPMS welcomed the gathering and shared the importance of knowing one's potential and area of interest before making a decision.

The speakers for the program were Deepak Luthra, Director of Admission South Asian Region, Griffith College Ireland and Sony Akkara, internationally certified Career Coach. They untangled the scope to study, work and how to settle in Ireland pertaining to the career development of M.Pharm and PharmD students.

M Gopal Rao, vice principal, College of Pharmacy, SRIPMS delivered the vote of thanks.



*Sri Ramakrishna Institute of Paramedical Sciences inked a Memorandum of Understanding with Eazylink Academy (Photo from left to right) Sony Akkara, Deepak Luthra, Lakshmi narayanan and Vice Principal M Gopal Rao.*

## KPR CAS organises five-day FDP

The Covai Mail

KPR College of Arts Science and Research, Coimbatore, School of Computing Science, Department of Information Technology inaugurated A five-day FDP and Hands-on-Session on Digital Forensics and Cybersecurity on 18.12.2023. Dr. Geetha P, Principal presided the event and Dr. P. Sharmila, Dean, School of Computing Science felicitated the programme.

Dr. Sumathi A, Head & Associate Professor delivered the Welcome Address. Dr. Ashok KumarMohan, Founder&Director, Kriyavan Cyber Forensic Services Pvt Ltd, Madurai acted as the Resource Person. He highlighted the role of Cybersecurity and Digital Forensics Techniques to reduce cyber related crime. He explained how to extract data from the electronic evidences, process it into actionable intelligence and present the findings for prosecution.

Finally, Dr. Srimathi.J, Associate Professor, Department of Information Technology, proposed the Vote of Thanks. Dr. S.Janarthanam, Associate Professor and Dr.Baskar.G, Associate Professor, Department of Information Technology, coordinated the FDP programme. Around 35 faculty members participated and got benefitted.

## VIMS signs MoU with Aetram

The Covai Mail

Vivekananda Institute of Management Studies, Coimbatore, signed Memorandum of Understanding (MoU) with Aetram Group of Companies, Chennai on 20th December 2023.

Dr.A. Valarmathi Director – VIMS, delivered the Presidential Address and advised students to explore investment avenues and also asked them to utilize technology to its fullest potential to learn the nuances of trading and the importance of taking calculated risks.

An Expert talk was delivered by the Chief Guest Mr. A. Ramaswamy, Sales President Aetram Business Solution LLP on "Entrepreneurial Opportunities in Equity and Commodity Markets".

He addressed the importance of handling money in a modern scenario and also explained the correlation between the art of salesmanship and being a good trader.

Further, he added insights on merchant banking, IPOs, the working model of DRHP, and opportunities in the equity and commodity markets.

Students were asked to perform a mock trading activity. Mr. Aravind, Associate Vice President and Mr. Anbarasu, Customer Support and Engagement, Aetram Business Solutions were also present at this event. On this occasion, Chief Guests were honored by the Director with Memento.

## RCAS earns esteemed "Star College Scheme"

The Covai Mail

Rathinam College of Arts and Science organised the Induction programme for acquiring the esteemed "Star College Scheme" by the Department of Biotechnology, Government of India on Dec. 16.

The principle objectives of this scheme are to identify and allocate funds for the Institutions which ameliorate the students. In continuation with this, the five Basic Science Departments of Rathinam College of Arts and Science are granted with Rs.1.65 crores.

The beneficiaries of this scheme are both the UG students and faculty members of Biotechnology, Microbiology, Computer Science, Physics and Mathematics. The star scheme provides exclusive syllabus, hands on training, internships for students and revitalized Faculty Development Programmes.

In addition to this awareness programs, competitions and extension activities in nearby communities have been planned to be conducted for the three consecutive years.

This occasion was inaugurated by Garima Gupta, Scientist – F, Department of Biotechnology, Ministry of Science and Technology. S. Balasubramanian, Principal, Rathinam College of Arts and Science, welcomed the gathering. Madan. A. Sendhil, Chairman, Rathinam Group of Institutions rendered the Presidential address. R. Rajendran, Department of Microbiology, PSG College of Arts and Science, delivered the special address. S. N. Suresh, Vice Principal, Co-ordinator of the Star College Scheme, highlighted the significance of the Star College Scheme. K. P. V. Sabareesh, Dean of Research and Development; T. M. Hemalatha, Dean, School of Commerce.

Mr.K. Sargurunathan, Dean, Student Affairs, Heads, faculty members and students of beneficiary Departments and others graced the occasion with their presence.

The vibrant event came to its final stage with the vote of thanks by Dr. R. Manickam, CEO & Secretary, Rathinam College of Arts and Science.



*Madan Senthil, Chairman, Rathinam Group of Institutions presented a memento to the chief guest Karima Gupta to commemorate her participation in the event*

## NSE SSE marks SGBS Unnati Foundation listing

The Covai Mail

National Stock Exchange of India's Social Stock Exchange (NSE SSE) held an event for historic moment of Country's First Ever Listing by SGBS Unnati Foundation at NSE's Headquarter and it was attended by an esteemed gathering of dignitaries, NPOs, Regulators and media houses.

This First Listing witnessed fund mobilization of Approx. INR 1.8 Cr, which will enable SGBS Unnati Foundation to impart training to approx. 10,000 graduating youths in their final years from government colleges located across various states, such as Uttar Pradesh, Madhya Pradesh, Karnataka, Andhra Pradesh, and Tamil Nadu.

"This is the momentous day for our country as we witness the launch of listings on a new platform that will enable Social Enterprises including Non-profit Organisations to access capital and raise funds for a noble cause." said Ashwani Bhatia, Whole Time Member, SEBI.

## Rotary Club of Coimbatore hosts Governor's visit



*The Rotary Club of Coimbatore Centennial recently hosted its Governor's visit at Hotel the Grand Regent on Dec 20. Rtn. Vijayakumar T R, District Governor, participated in the event along with Ron. Sathish S, Assistant Governor, Rtn. MD. S. Gokulraj, District Director, Rtn. S. Panneerselvan, Governor's Group Representative and other officials. They also donated gym equipment worth 1 lakhs to aid the fitness journey of the physically challenged.*

## SIH finale at Coimbatore Innovation and Business Incubator (Forge)

The Covai Mail

Smart India Hackathon was held from 19th December to 23rd December, 2023 at Coimbatore Innovation and Business Incubator (Forge).

The event witnessed huge participation from Ministries, departments, PSUs, and private organizations in providing problem statements. This nationwide initiative by the Ministry of Education's Innovation Cell aimed to provide students a platform to solve the pressing problems of the government, ministries, departments, industries and other organizations. SIH 2023 has offered 231 problem statements received from 51 departments of 25 Ministries with the involvement 12000+ participants.





To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com



THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.


## Vi enters partnership with Gameloft

The Covai Mail

Leading telecom operator Vi, has partnered with globally renowned mobile video game developer, Gameloft, to offer a wide range of hyper casual games across genres such as action, adventure, sports, racing, and many others to Vi users via Vi Games on Vi App.

Through this partnership, Vi customers can access Gameloft originals and other popular game titles such as Danger Dash, Block Breaker Unlimited, Ludi Bubbles, Asphalt Retro, and more at no additional cost.

Vi customers can easily explore this gaming bonanza by navigating through Vi Games section on the Vi App and diving into the Fun Games section. The Gameloft options on Vi Games have a fresh and easy to use look and feel and come with state-of-the-art anti-fraud detection and security solution.

Vi's partnership with Gameloft underscores its dedication to deliver immersive games, reaffirming its commitment to provide the best in category gaming options and experience to mobile gamers. The collaboration is one more significant step towards delivering an unparalleled gaming experience for Vi customers.

The current offering to subscribers is at no cost. Vi plans to launch a subscription based service of Gameloft's tournament led service called Arena in the near future.


Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

வாழ்த்து செய்தி தொடர்ச்சி..

# நல்ல உள்ளங்களின் ஆதரவில் 11ம் ஆண்டு வெற்றிப்பயணம்!

உங்கள் அபிமானத்தைப் பெற்ற எங்கள் தி கோவை மெயில் வார பத்திரிக்கை தனது 10 ஆண்டுகளை 12.12.2023 அன்று நிறைவு செய்து, தற்போது பதினோராம் ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கிறது. எங்கள் உழைப்பையும், அர்ப்பணிப்பையும் பாராட்டிய நல்ல உள்ளங்களின் வாழ்த்துகள் இந்நாள் வரையிலும் தொடர்ந்து வருகிறது. அந்த வாழ்த்து செய்தியின் தொடர்ச்சியாக தி கோவை மெயில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வரும் குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி, எஸ்.என்.எஸ் கல்விக் குழுமம், நேரு கல்விக் குழுமம், கற்பகம் பல்கலைக்கழகம், ரத்தினம் கல்விக் குழுமம் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களை இந்த தருணத்தில் குறிப்பிடுவதில் மிகுந்த பெருமையுடனும் நன்றியுடனும் இருக்கிறோம்.

அதேபோல்,விமன்ஸ் சென்டர் பை மதர்ஹூட், ராவ் மருத்துவமனை, ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, கங்கா மருத்துவ மையம் மற்றும் மருத்துவமனை, ஜெம் மருத்துவமனை என நல்ல உள்ளங்களின் பட்டியல்கள் நீள்கிறது. மேலும், தொழில் வளர்ச்சிக்கு டிவிஎஸ், ஹோண்டா, ஹீரோ, ஆதி மாருதி, கணபதி சில்க்ஸ், கணபதி மார்ட் உள்ளிட்ட நிறுவனங்களின் பங்களிப்பு இன்றியமையாதது.

இந்த தருணத்தில் 'தி கோவை மெயில்' வெற்றிக்கு முதுகெலும்பாக இருந்த பணியாளர்களை நினைவு கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த 10 ஆண்டுகளாகப் பல தடைகளைத் தாண்டி நல்ல உள்ளங்கள் பலரின் அன்பும் ஆதரவும் பெற்று, வெற்றியுடன் 11 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்து மேலும் பல சாதனைகளை நோக்கிப் பயணிக்கும் எங்களுக்கு எப்போதும்போல் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் ஊக்கமும் வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

## வெற்றி தொடரட்டும்

'தி கோவை மெயில்' பத்து ஆண்டுகள் நிறைவடைந்து 11 ஆம் ஆண்டில் வெற்றிப்பயணம் தொடர என் வாழ்த்துகள்.



- பாலகிருஷ்ணன், கோவை மாநகர காவல் ஆணையர்

## விரிவான தகவல்கள் வெளியிடும் பத்திரிக்கை



ஆரோக்கியம் சார்ந்த தகவல்களை விரிவாக வெளியிடும் 'தி கோவை மெயில்' பத்திரிக்கைக்கு எனது வாழ்த்துகள்.

- மாதேஸ்வரன், தலைவர், ராயல் கேர்

## மேலும் வளரவேண்டும்



தி கோவை மெயில் 10வது ஆண்டை வெற்றிகரமாக நிறைவு செய்ததில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இனி வரும் ஆண்டுகளில் தி கோவை மெயில் நாட்டின் புகழ்பெற்ற செய்தித்தாள்களில் ஒன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

- ஆர். எஸ். மாருதி, நிர்வாக இயக்குநர், சம்பா பதிப்பகம்

## மேலும் சிறக்க வேண்டும்

10 ஆண்டுகள் நிறைவு செய்திருக்கும் 'தி கோவை மெயில்' மென்மேலும் சிறந்து, தினசரி பத்திரிக்கையாக உயர வேண்டும். ஹெல்த் சயின்ஸ் பிரிவு செய்திகளை வழங்குவதில் தி கோவை மெயில் சிறப்பான சேவையை செய்து வருகிறது.



- தாமோதர், தலைவர், ராவ் மருத்துவமனை

## பங்களிப்பு அதிகம்

விளம்பரத்தில் 'தி கோவை மெயில்' சிறப்பான பத்திரிக்கை. எங்கள் வளர்ச்சிக்குக் கோவை மெயிலின் பங்களிப்பு அதிகம் உண்டு என்று சொன்னால் அது மிகையல்ல. தி கோவை மெயில் மென் மேலும் வளர வாழ்த்துகள்.



- கணபதி, நிர்வாக இயக்குநர், கணபதி மார்ட்

## ஆளுமைகளை வெளிப்படுத்தும் மெயில்



கோவையின் வளர்ந்து வரும் ஆளுமைகளின் திறமைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பெரும் பணியை செய்து வரும் தி கோவை மெயில் பத்திரிக்கைக்கும் அதன் ஊழியர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ஆதி பாண்டியன், மக்கள் தொடர்பு அலுவலர், கற்பகம் கல்வி நிறுவனங்கள்

## நாங்கள் இரட்டை பிறவிகள்



தி கோவை மெயிலும், எல்.சி மருத்துவமனையும் இரட்டை பிறவிகள் என்றே சொல்லாம். இரண்டு நிறுவனமும் ஒரே ஆண்டு தொடங்கப்பட்டது. செய்திகள் மட்டுமின்றி, விளம்பரத் துறையிலும் சிறப்பாகச் செயல்பட்டுவரும் கோவை மெயில் பத்திரிக்கைக்கு எனது வாழ்த்துகள்.

- வித்யா ராஜன், எல்.சி மருத்துவமனை

## வாழ்த்த வார்த்தைகள் இல்லை



'தி கோவை மெயில்' வாரப் பத்திரிக்கையில் ஒரு தூணாக நான் இருந்தேன் என்று எண்ணும்ம்போது மிகவும் பெருமை கொள்கிறேன். எங்கள் பத்திரிக்கை, இன்னும் பல உயரங்களை அடைய வேண்டும். வாழ்த்த வார்த்தைகள் இல்லை. தி கோவை மெயிலுக்கு என் மனமார்ந்த பாராட்டுகள். மகிழ்ச்சி.

- செல்வா, முன்னாள் அலுவலர், தி கோவை மெயில்

## வெற்றி பயணம் தொடரட்டும்

- முகமது ஜியாவுதீன், முன்னாள் நீதிபதி



இன்று உலகளாவிய அளவில் இணையதளங்களும் கைபேசியும் தேடுகிற அனைத்தையும் தருகிற சூழலில், ஒரு பெரிய இயக்கம் நடத்துவதை விட இதழ் (பத்திரிக்கை) நடத்துவது சவாலான காரியமாக இருந்து வருகிறது.

ஆனால் கோவை மாநகரில் கோவை மெயில் என்ற இரு மொழி இதழ் கடந்த 10 ஆண்டுகளாக கோயமுத்தூர் மாநகரில் நடக்கிற நிகழ்வுகள், செய்திகள், கோவையை மேம்படுத்துகிற யோசனைகள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் தனக்கென தனி முத்திரை பதித்து வருகிறது.

தொழில் துறை, கல்வி, மருத்துவ வளர்ச்சி போன்ற அனைத்து தகவல்களும் கோவை மெயில் இதழில் தொடர்ந்து இடம்பெறுகின்றது என்பது பெருமைக்குரிய அம்சமாகும்.

இதழ்களில் சிற்றிதழ் பெரிய பத்திரிக்கை என்கிற பேதங்கள் தேவையில்லை சிறிய அளவில் வெளியிடப்பட்ட துண்டறிக்கைகள் கூட மாபெரும் சமூக மாற்றங்களுக்கும் புரட்சிகளுக்கும் காரணமாக இருந்திருக்கிறது என்பதை வரலாற்றின் பாடங்கள் நமக்கு வழங்கியிருக்கிறது.

கோயமுத்தூர் மாவட்டம் அல்லது கொங்கு மண்டலம் மட்டுமல்லாது தமிழ்நாடு முழுவதும் பல்வேறு துறைகளில் ஆளுமை மிக்க வல்லுநர்களை உருவாக்கிய கோவை பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரியில் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் பாடத்தில் முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்ற நண்பர் கே.சி. சீனிவாசன் அவர்களின் கல்வி அறிவும், அனுபவங்களும், பல்துறை சார்ந்த நபர்களோடு அவருக்கு இருக்கும் தொடர்பும் கோவை மெயில் பத்திரிகை நடத்துவதில் வெற்றியைத் தந்திருக்கிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த புகழ்பெற்ற இதழியல் பேராசிரியரான ஹெரால்டு பெஞ்சமின் பத்திரிக்கை துறை குறித்து,

'பொது நோக்குடைய இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்க கருவியாகும். அதன் மூலம்தான் இன்றைய சமுதாயம் அதனுடைய வழிகளை வகுத்துக் கொண்டும் மாற்றிக் கொண்டும் தெளிவாக வரையறுக்கப் பெற்ற வளரும் மனிதநலன் என்னும் இலட்சியத்தை நோக்கி நடைபயில்கின்றது' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு இதழ் என்பது செய்திகளை அறிவித்தல், அந்த செய்திகளின் மூலம் சமூகத்திற்கு அறிவுறுத்தல் செய்தல், நல்ல நிகழ்வுகளை பகிர்வதன் மூலம் வாசிப்பவர்களை மகிழ்வித்தல், விளம்பரம் அல்லது வணிக செய்திகளின் மூலம் தொழில் மேம்பாட்டுக்கு உதவுதல் ஆகிய பணிகளைச் செய்ய வேண்டும். கோவை மெயில் மேற்கண்ட அனைத்து அம்சங்களோடு சிறப்பாக வெளிவருகிறது.

'பொது நோக்குடைய இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்க கருவியாகும். இன்று வெற்றிகரமாக பத்து ஆண்டுகள் பயணம் தொடரும் கோவை மெயில் நூறாண்டு கடந்தும் வெற்றி நடைபோடும் என்ற நம்பிக்கையோடு,

**"காரிருள் அகத்தில் நல்ல**
**கதிரொளி நீ தான்! இந்தப்**
**பாரிடைத் துயில்வோர் கண்ணில்**
**பாய்ந்திடும் எழுச்சி நீ தான்!**
**ஊரினை நாட்டை இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறிவாளர் நெஞ்சில்**
**பிறந்த பத்திரிகைப் பெண்ணேஞ்.**
**வானிடை நிகழும் கோடி**
**மாயங்கள், மாநிலத்தில்**
**ஊனிடை உயிரில் வாழ்வின்**
**உட்புறம் வெளிப்பு றத்தே.**
**ஆன நற்கொள்கை, அன்பின்**
**அற்புதம் இயற்கைக் கூத்துத்,**
**தேனிதழ் தன்னிற் சேர்த்துத்**
**தித்திக்கத் தருவாய் நித்தம்!"**

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் கவிதை வரிகளை காணிக்கையாக்கி வாழ்த்துகிறேன்.

## மிக்க மகிழ்ச்சி

கோவை மெயிலை உருவாக்கியவர்களில் நானும் ஒருவன் என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆரம்பக் காலங்களில் இந்த இதழ் பல தடைகளைச் சந்தித்தது, இருப்பினும் கைவிடவில்லை. இப்போது, 10 ஆம் ஆண்டில் இன்னொரு மைல்கல்லில் அடியெடுத்து வைக்கிறது. என் இதயப்பூர்வமான அணி வெற்றிபெற வாழ்த்துகள்.



- சந்தோஷ், கிரியேட்டிவ் ஹெட், முன்னாள் அலுவலர், தி கோவை மெயில்

## எனது அடையாளம்

'கோவை மெயில் மணி' என்று என்னை பிறருக்கு அடையாளப்படுத்தியது 'தி கோவை மெயில்' என் வாழக்கை பயணத்தில் கோவை மெயிலுக்கு முக்கிய இடம் உள்ளது. எனது நிறுவனம் மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.



- மணி, விற்பனை பிரிவு, முன்னாள் அலுவலர், தி கோவை மெயில்

# தொழில்நுட்பத்தை மாற்றியமைக்க முயற்சியுங்கள்

**மார்க்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் முதன்மை செயல் அலுவலர் வேலுசாமி**



சந்திராயன் 3 க்கு பங்களித்த 8 பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களுடன் பி.எஸ்.ஜி. முன்னாள் மாணவர் சங்கத்தின் தலைவர் மயில்சாமி, பொதுச்செயலாளர் அரசு உள்ளிட்டோர்.

✍ தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி. தொழில்நுட்பத்தின் 6வது முன்னாள் மாணவர் காங்கிரஸ் 2023 விழா சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் பிரகாசன் பேசுகையில், 'உலகம் முழுவதும் உள்ள பி.எஸ்.ஜி. டெக். முன்னாள் மாணவர்களின் பலத்தினையும், அவர்களுடைய மலரும் நினைவுகளையும் இந்த கூட்டமைப்பு மீண்டும் ஒருமுறை நினைவு கூறும்' என்றார்.

சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முன்னாள் மாணவியான பெங்களூரு இஸ்ரோ விஞ்ஞானி மற்றும் இணை இயக்குநர் கல்பனா, பங்கேற்றார். அவர் பேசுகையில், முன்னாள் மாணவர் விழாவிற்கு வருகை புரிந்தது, சந்திராயன் 3 யை நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக செலுத்திய பின் தாய் வீட்டிற்கு மீண்டும் திரும்பியது போன்று பெருமையாக உள்ளது. இஸ்ரோ பல்வேறு சாதனைகளை உயர்ந்த மதிப்பில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இஸ்ரோவில் ஒரு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றால்



முதல் கட்டத்திலையே ஆய்வு குழு அமைத்து அதனை தெளிவாக திட்டமிட வேண்டும் . அதிலே, திட்டத்தின் சாத்தியக் கூறுகள், விதிமுறைகள் போன்றவை உள்ளடங்கும். ஒவ்வொரு கட்டத்திலும், பல்வேறு மதிப்புரை செய்யப்படும். செயல்படுத்தும் திட்டத்தில் அதிக நேரம் செலுத்துவதால், சாத்தியமான விண்வெளி பயணங்களை உருவாக்க முடிகிறது., என்றார். மேலும், தனது எலக்ட்ரோ ஆப்டிக் சென்சார்கள் மற்றும் பேலோடு துறையின் செயல்முறைகளையும், இஸ்ரோவின் வரவிருக்கும் விண்வெளி பயணங்கள் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

அதனை தொடர்ந்து, கௌரவ விருந்தினரான கோவை மார்க்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸின் முதன்மை செயல் அலுவலர் வேலுசாமி, பங்கேற்று சிறப்புரையாற்றினார். அவர் தனது கல்லூரி நினைவுகளை நினைவு கூர்ந்ததோடு, தனது தொழில்முறை அனுபவத்தை பகிர்ந்துகொண்டார். மாணவர்கள் கல்லூரி



நிலையிலேயே , தங்கள் திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும். நீங்கள் பயிலும் கல்வி கல்லூரியோடு மட்டும்முடியாமல், வாழ்வில் உங்களை திறமையான நபராக மாற்றுவதற்கும் உறுதுணையாக அமைகிறது. எனவே,மாணவர்கள் உங்கள் கனவுகளை தொடர்ந்து, தொழில்முனை திறன்களை மேம்படுத்தி கொள்ளுங்கள். இன்றைய தொழிநுட்பம் நாளைய வரலாறாகும். எனவே தொழில்நுட்பத்தை மாற்றியமைக்க முயற்சி செய்யுங்கள், அதில் சிக்கி கொள்ளாதீர் எனவும் மாணவர்களிடம் வலியுறுத்தினார்.

இஸ்ரோவின் வெற்றிப் பயணமான சந்திரயான் 3 க்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய 8 பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களான இஸ்ரோ விஞ்ஞானி மற்றும் இணை இயக்குநர் கல்பனா, இயந்திர அமைப்புகள் பகுப்பாய்வின் துணை இயக்குநர் சுரேஷ்குமார், கட்டுப்பாட்டு இயக்கவியல் வடிவமைப்பு குழுவின் குழு இயக்குநர் விஞ் ஞானி சிவா, கட்டுப்பாடு – டிஜிட்டல் மின்னணுக் குழுவின் பிரிவுத் தலைவர் விஞ்ஞானி தினகரன், மிஷன் சிமுலேஷன் குழுவின் பிரிவுத் தலைவர் விஞ்ஞானி பரத் குமார், ஆப்டிகல் சிஸ்டம்ஸ் பகுதி எல்இஓஎஸ், துணை இயக்குநர் விஞ் ஞானி வெங்கடேஸ்வரன், கட்டுப்பாட்டு இயக்கவியல் வடிவமைப்பு குழு விஞ் ஞானி அசோக்குமார், பணி திட்டமிடல் மற்றும் செயல்பாட்டுக் குழு விஞ் ஞானி ரித்திகா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து, ஆன்லைன் முறையில் நடத்தப்பட்ட பி.எஸ்.ஜி. டெக் டேலண்ட் டெஸ்டில் 163 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 669 மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு ஜிஆர்டி ரோலிங் டிராபி எனும் பி.எஸ்.ஜி. டெக் டேலண்ட் டெஸ்ட் விருது வழங்கப்பட்டன.

மேலும், 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டம் பெற்று, அந்தந்த துறையிலும் சமூகத்திலும் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பாற்றி தமது தொழில் வாழ்க்கையில் சிறந்து விளங்கிய 16 சிறந்த முன்னாள் மாணவர்களுக்கான 'யங் அலும்னி' விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் பி.எஸ்.ஜி டெக் முன்னாள் மாணவர் சங்கத்தின் தலைவர் மயில்சாமி, பொதுச்செயலர் அரசு, பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் கிரிராஜ், முன்னாள் மாணவர் காங்கிரஸ் 2023 தலைவர் கே கார்த்திக், இணைத் தலைவர் செந்தில் குமார், கல்லூரியின் மூத்த முன்னாள் மாணவர்கள் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.